பதிவு எண் M. 4900.　　16 பக்கங்கள்.

குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 23-7-1949 சனிக்கிழமை } மலர் 46.

நாஸ்தீகன் என்பதே ஒரு கற்பனை

"நாஸ்தீகன்" என்னும் பதத்துக்கு டாக்டர் வேல்ஸ் கூறும் வியாக்கியானத்தைத் தோழர் ஹக்ஸ்லி மேற்கோளாக எடுத்தாண்டு கேலி செய்கிறார். டாக்டர் வேல்ஸ் கூறுவதாவது:—

நாஸ்தீகன் என்னும் பதம் விரும்பத்தகாத முறையில் வழங்கப்படுகிறது. அதாவது மதப்பற்றுடையார்கள் அம்மதத்திற்கு மாறான கருத்துள்ளவர்களை இழிவு படுத்தவே நாஸ்திகம் என்ற பதத்தை வழங்குகிறார்கள். அது ஒரு வசைமொழியாகக் கற்பித்துக் கொண்டிருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் உண்டு என்று நம்புவதை மற்ற யாராவது இல்லையென்று மறுப்பது அக்கிரமம் என்பது அவர்கள் கருத்து.

ஆகவே, ஒருவனை நாஸ்தீகனென்று அழைப்பதானால் அவன் நன்னெறியற்றவன் என்று பிறர் கருதவேண்டுமென்பது அழைப்பவர்களின் கருத்து.

கொஞ்ச காலத்துக்குமுன் நாஸ்தீகர் எனப்படுவோர் சமுதாய பிரஷ்டர்களாகக்கூட மதிக்கப்பட்டனர்.

அதற்கும் கொஞ்ச காலத்திற்கு முன் நாஸ்தீகர் எனப்படுவோரை அரசர்கள் ஹிம்சித்தும் வந்தனர்.

அதற்கும் வெகு காலத்தக்கு முன் நாஸ்தீகர் எனப்படுவோருக்கெல்லாம் சித்திரவதையும், மரண தண்டனையும் விதிக்கப்பட்டு வந்தது.

இப்பொழுதோ அந்நிலைமை முற்றிலும் மாற்றம் அடைந்து விட்டது என்றாலும் சாமான்ய ஜனங்களால் மதம் என்று கூறப்படுவதை மறுப்பவர்களையெல்லாம் தூஷித்துச் சமுதாயப் பிரஷ்டர்களாகக் கருதுவதும், அறிவு வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி ஞான முன்னேற்றத்திற்கும் தடை உண்டுபண்ணி, வைதீகத்துக்கு ஆதாவளிப்பதுமாயிருந்து வருகிறதானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது.

நிற்க வேதங்களெல்லாம் தெய்வ வாக்கென்றும், வேதங்களை மறுப்பது கடவுள் இல்லையென்று மறுப்பதற்கு ஒப்பாகுமென்றும் மக்கள் பொதுவாகக் கருதி இருக்கும் நம்பிக்கையே சாமான்ய மதக் கோட்பாடுகளை மறுப்பவனைக் கூட நாஸ்தீகனென்று பழிக்கப்படுவதற்கு மூலகாரணமாயிருக்கிறது.

ஆனால், வேதங்களெல்லாம் தெய்வத்தின் சொந்த வாக்கென்று நம்புவதென்பது நாஸ்தீகனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது.

ஆகவே, நாஸ்தீகன் கடவுள் வார்த்தைகளையாவது, கடவுள் கட்டளைகளையாவது ஒரு போதும் மறுக்கவில்லையென்பதும், மனிதனுடைய வார்த்தைகளையும் கட்டளைகளையும் மட்டுமேதான் அவன் மறுக்கிறான் என்பதும் யோசித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

சர்வ சக்தியும், சர்வ் வியாபகமும், சர்வமும் அறியும் தன்மையும், சர்வ தயாபரத்துவமும் உடைய கடவுள் என்பதாக ஒன்று உண்டென்று நம்பின—அறிந்தயெவனும் அப்படிப்பட்ட கடவுள் ஒருவர் இல்லையென்று மறுக்க முன்வரவேமாட்டான். இதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஏனெனில் அப்படிப்பட்ட கடவுளை இல்லையென்று மறுப்பதால் அவனுக்கு என்ன லாபம்?

கடவுள் தண்டனையை அலட்சியம் செய்தாவது இப்படிச்சொல்லவேண்டுமென்கின்ற அவசியம் அவனுக்கு என்ன வந்தது?

அன்றியும் வேதங்களெல்லாம் கடவுளாலேயே கூறப்பட்டனவென்று மனப்பூர்வமாக அறிந்த எவனும்— சந்தேகத்துக்காவது ஆளான எவனும் "வேதங்கள் கடவுள் வாக்கல்ல" என்று மறுக்கவும் துணியமாட்டான்.

வேதங்கள் எல்லாம் தெய்வ வாக்கு என்று கூறுவதற்கு வெறும் குருட்டு நம்பிக்கையும் நிர்ப்பந்தமுமே ஆதாரமாக இருக்கின்றதே ஒழிய, எவ்வித ருஜுவோ பிரத்தியக்ஷ பிரமாணமோ ஒன்றும் இல்லை.

எனவே, ஆஸ்தீகனுக்கும் நாஸ்தீகனுக்கும் வித்தியாசம் என்ன? என்று பார்ப்போமானால் முதலாவது, ஆஸ்தீகன் புராணங்கள் கூறுபவைகளையெல்லாம் உண்மையென்று நம்பவேண்டுமென்கின்றான். நாஸ்தீகன் அவைகளை அப்படியே ஒப்புக்கொள்ள மறுக்கிறான். இவ்வளவுதான் ஆஸ்தீக

னுக்கும் நாஸ்தீகனுக்கும் உள்ள உண்மையான வித்தியாசம்.

ஒருவன் ஒன்றை உண்டென்று நம்புவதனாலே உயர்ந்த நெறியுடையவனாக ஆகிவிடமாட்டான்; இல்லை என்று மறுப்பதனால் அதனாலேயே நெறிகெட்டவனுமாகான். ஏனெனில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அதனதன் ருசுவைப் பொறுத்தது.

வேதங்களெல்லாம் கடவுள் வாக்கென்றெண்ணி ஆஸ்தீகன் அவைகளை நம்புகிறான் என்றாலும், யாரோ சிலர் "வேதங்கள் எல்லாம் கடவுள் வாக்கு" என்று சொன்னதை நம்பித்தான் அவனும் வேதங்களைக் கடவுள் வாக்கென்று நம்புகிறானே அல்லாமல் தனக்கு தேவையான ருஜுவெல்லாம் கிடைத்துவிட்டது என்று அல்ல.

ஆனால், அவன் அவ்விஷயத்தைச் சற்று நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால், வேதங்கள் கடவுள் வாக்கென்று கூறுவது 'கடவுள் அல்ல' என்பதும் மனிதன்தான் என்பதும், வேதங்களுக்கும் கடவுளுக்கும் ஒரு சம்பந்தமுமில்லையென்பதும் அவனுக்கு நன்கு புலனாகாமல் போகாது.

ஏனென்றால், என் ஆஸ்தீக நண்பர்களில் எவரும் ஒரு பொழுதும் கடவுளைக் கண்டதே கிடையாது. கடவுளிடமிருந்து வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ யாதொரு செய்தியும் அவர்களுக்கு வந்ததுமில்லை.

வேதங்கள் எல்லாம் கடவுள் வாய்ப்பிறப்பு என்பதற்குக்கடவுளிடமிருந்து நேர்முகமான தெளிவு எதுவும் அவர்களுக்குக் கிடையவும் கிடையாது.

எல்லாம் கடவுள் வாய்மொழி என்று நம்புவதற்கு ஆதாரமாயிருப்பதெல்லாம் "ரிஷி வாக்கியங்கள் என்பவைகளும்" புராணங்கள் என்பவைகளும், கடவுள் அருள் பெற்றவர்கள் என்பவர்கள் சொன்னார்கள் என்று எழுதி வைக்கப்பட்டவைகளும்தான். ஆனால் அவை நம் கண்ணெதிரே மனிதர்களாலேயே எழுதப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பெற்றதையும், பெறுவதையும் பார்க்கிறோம்.

ஓ! ஆஸ்தீக நண்பனே! வேதங்களையெல்லாம் கடவுள் ரிஷிகளுக்கு உபதேசம் செய்ததாக நீ நம்புகிறாயே ஒழிய கடவுள் அவ்வாறு உபதேசம் செய்ததாக கடவுள் உன்னிடம் நேரில் சொன்னது கிடையாதே, நீ பார்த்ததும் கிடையாதே. வேதங்களெல்லாம் கடவுள் வார்த்தையென்று யாரோ சொன்னதைத்தானே நீ நம்பிக்கொண்டிருக்கிறாய்.

ஆனால் உண்மையில் "ரிஷிகள்" யாரென்றும் உனக்குத் தெரியாது. வேதங்களை எழுதியவர் யாரென்றும், எப்பொழுது என்றும் நீ அறியாய்? வேதங்களை மொழிபெயர்த்ததும் தொகுத்ததும்கூட இன்னார் என்றும் உனக்கு நேரில் தெரியாது.

எனவே, உனக்குத்தெரியாத— யாரோ சிலர் சொல்வதை ஆதாரமாகக்கொண்டு வேதங்களெல்லாம் தேவவாக்கென்று நீ நம்புகிறாய்; ஆகவே, வேதங்கள் தேவவாக்கல்லவென்று நான் மறுப்பதனால் அது தேவவாக்கை நான் மறுத்ததாக எப்படி ஏற்படும்; ஒருக்காலும் ஏற்படவே மாட்டாது. மனிதவாக்கை மறுப்பதாகவேதான் ஏற்படும்.

ஆனால் நாஸ்தீகர்கள் வேண்டுமென்றே ஏதோ துர் எண்ணத்தின் பேரில் வேத சாஸ்திரங்களை மறுப்பதாக ஆஸ்தீகர்கள் பழி சுமத்துகிறார்கள். அதிலுள்ள உண்மை என்னவெனில், நாஸ்தீகன் தனது பகுத்தறிவுக்குச் சரி என்றும் உண்மையென்றும் பட்டதை மாத்திரம்தான் நம்புகிறான். மற்றபடி சாமான்ய ஜனங்கள் கைக்கொண்டொழுகும் மதங்கள் அவனது பகுத்தறிவுக்குப் பொய்யென்று தோன்றுவதாலும், அந்தப்படி தோன்றும் மதம் மக்களுக்கு எவ்வித நன்மையையும் பயக்காதென்றும், தீமையே பயக்கும் என்றும் அவன் நம்புவதாலும், அனுபவத்தில் காண்பதனாலும் நாஸ்தீகன் அதை அடியோடு மறுப்பதோடு எதிர்க்கவும் செய்கிறான்.

அன்றியும் தன் பகுத்தறிவுக்குச் சரியெனத் தோன்றுபவைகளை வெளிப்படையாகக்கூறி, அவைகளை பகிரங்கமாய்ப் பிரச்சாரம் செய்யும் நாஸ்தீகன் மிக ஒழுங்காகவே நடக்கிறான். இவ்விஷயத்தில் ஒரு போப்புக்கோ, அல்லது ஒரு மதாச்சாரியர்களுக்கோ உள்ள பெருமை அவனுக்குமுண்டு.

தவிர நாஸ்தீகர்கள் எல்லாம்சுயநலக்காரர், நெறியற்றவர்கள் என்று குறைகூறுவதானது சிறிதும் புத்தியற்றவர்கள் கூறும் கூற்றாகும்.

ஏனெனில், அப்படிச் சொல்லுவதானது "அபேதவாத (சோஷியலிஸ்ட்) தலைவர்களெல்லாம் சுயநலக்காரர்கள், நெறியற்றவர்கள்" என்று குறை கூறுவதற்கு ஒப்பாகவே இருக்கிறது.

உண்மையில் நாஸ்தீகர்களையும் சோஷியலிஸ்டுத் தலைவர்களையும் ஜனங்கள் ஆதரிப்பதுமில்லை, மதிப்பதுமில்லை. அன்றியும் பழிக்கவும் வெறுக்கவும் செய்கிறார்கள். ஆகவே, பொதுஜன மதிப்பில்லாத இந்தப் பழியினாலும் வெறுப்பினாலும் நாஸ்தீகர்களுக்கு என்ன விதமான சுயநலமோ, லாபமோ, பெருமையோ இருக்கமுடியும்?

"ஜாதிப் பிரஷ்டனாகவோ, பொதுஜன மதிப்பை இழக்கவோ, பொருள் நஷ்டமடையவோ, இழக்கப்படவோ நீ இஷ்டப்பட்டால்மாத்திரம் நாஸ்தீகன் அல்லது சோஷியலிஸ்டு எனப் பெயர் எடுப்பாயாக" என்று ஒரு பெரியார் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, இதில் ஒரு மனிதனுக்கு சுயநலம் இருக்குமா?

எனவே, நாஸ்தீகத்தினால் ஒருவன் எத்தகைய இலாபமும் அடையமாட்டான், நாஸ்தீகன் எனப் பெயரெடுப்பது ஒரு மனோகாமானதும் கீர்த்தி அளிப்பதுமான செயலுமல்ல.

"வேதஉண்மை"யை மறுப்பவர்களுக்கெல்லாம் நாஸ்தீகப் பட்டம் சூட்டுவது, தன் நீங்காக் கடமையென ஆஸ்திகன் நம்புகிறான்.

கடவுளைக் காப்பாற்றுவதும் நாஸ்தீகனைப் பழிவாங்குவதும் தன் கடமை என ஆஸ்தீகன் கருதுகிறான். எல்லா மதக்காரர்களும் அவ்வாறே எண்ணுகிறார்கள்.

இந்தக் குரூர நம்பிக்கையினால் உண்டான போர்கள் எத்தனை! 'கடவுளைக் காப்பாற்ற'ப் புறப்பட்டவர்களால் கொல்லப்பட்டவர்கள் எத்தனை! சித்திரவதை செய்யப்பட்டவர்கள் எத்தனை! ஹிம்சிக்கப்பட்டவர்கள் எத்தனை!

இந்த மூட சாம்பிராணிகளின் பாதுகாப்பை விரும்புமாறு "கடவுள்" அவ்வளவு பலயீனமானவரா? தன்னை எதிர்க்கப்பட்டவர்களைக் கொல்லவும் பழிவாங்க

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

இந்து மதத்தில் பெண்கள் நிலை

தோழியர் லட்சுமி

நம் நாட்டுப் பெண்டிரின் பெருமைமிக்க சரிதம்—வீரமிக்க வரலாறு நல்ல முறையில் தீட்டி நம்முன் வைக்கப்படவில்லை. எனவே தான் வீழ்ச்சியுற்ற பெண்ணினம் ரமின்றிப் பேதையராகினர்—ஆக்கப்பட்டனர்.

பண்டைத் தமிழகப் பெண்கள் பெருமையுடனும் உரிமையுடனும் வாழ்ந்துள்ளனரென்பதற்குச் சரித்திரம் சான்று பகர்கின்றன. ஆற்றல் மிக்கோராகவும் அறிவில் சிறந்தாராகவும் விளங்கி உள்ளனர் அன்றையப் பெண்கள்.

அறிவு மணம் பரப்பிய ஔவை, க்கை பாடினியார் போன்ற லவர்களின் வழி வந்தோர் யாம் ன்றுரைக்க ஏதாவது வகை ண்டா நமக்கு?

கணவன் களம் சென்றிறந்தது கட்டு கலங்கா உள்ளத்துடன் ன் சிறு மைந்தனைப் போர்க் ளம் புகவிட்ட, மன உறுதி நிறை த வீரத்தாய்மார்களின் மரபினர் ன்றுரைக்க ஏதாவது எழுச்சி ண்டா நமக்கு?

இத்தகையோரின் வழி வந்த ம் வாழ்வின் வளம் குன்றி—டுப்பூசிகளாக, ஆண்களின் டிமைகளாக ஆக்கப்பட்டோம். அழிக்கப்பட்டோம், இந்துமத மனும் வஞ்சகக் கருவியால்!

பிற நாடுகளில் மதம் மக்கள் ர்ச்சியுறுவதற்கேற்ற முறையில் மைக்கப்படுகிறது. நாட்டின் லை மாற மாற மதத்தையும் லத்திற்கேற்ற முறையில் திரு தி அமைக்கப்படுகிறது. இந்நாட் லோ மக்களை மடையர்களாக்கு தோடில்லாமல், கீழ்சாதி—மேல் தி, ஆள்வோன்-அடிமை என்று பிரிவுகளை உண்டாக்கி நாட் ன் நிலையே நாசமாக்கப்பட்டது.

இந்து மதத்திலே பிறந்த பெண் ளுக்கு, பிறந்ததிலிருந்து இறக் ம்வரை எதையும் சிந்திக்க முடி தவர்களாக — தாழ்நிலையிலிரு மேல் நிலை எய்தாத வகையில் இருட்டிலிருந்து வெளிச்சத்தைக் காணமுடியாதவாறு, மதமும், மதத்தை அடிப்படையாகக் கொண்ட புராண இதிகாசங்களிலும் கட்டுப்பாடாக பெண்களை இழி நிலையிலேயே கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதத்தில் கடவுள்கள் என்று கூறப்படும் ஒரு ஆண்சாமியாவது பெண்களிடம் ஒழுக்கமான முறையில் நடந்துகொண்டதாகத்தெரியவில்லை. ஒரு மனைவியுடனாவது வாழ்கின்றனரா, அதுவும் இல்லை.

பால கோபாலனுக்குப் பல மனைவியர். இவரது திருட்டியில் படும் பெண்களின் மீது நாட்டம் செலுத்தி மோசம் செய்வதுதான் இவரது வேலை. பின்பு 'கண்ணன் என்றால் கருத்திழந்து விடுவர் கன்னியர்' என்று பெண்களைத் தாழ்த்தி எழுதுவது.

இதுகாறும் இத்தகைய செயல்களை "கடவுள்லீலை" என்று மறுப்புரைக்கப் படாமல் இருந்ததால் தான் மதவாதிகள் இன்னும் இத்தகைய இழிகதைகளை மெருகிட்டு நாட்டிலே உலவ விட்டுக் கொண்டுள்ளனர்.

சிவனாரின் மனைவி பார்வதியாக இருந்தும் — கங்கை ஒரு காதலி! அவரின் புதல்வரான சுப்பிரமணியருக்கு மனைவியர் இருவர். விஷ்ணுவோ இவர்களை விட ஒருபடி மிஞ்சியவர். இவ்வாறு கூறிக்கொண்டே போனால் வளர்ந்துகொண்டே போகும்.

இந்து மதத்திலே பெண்ணாகப் பிறப்பதே பாவம், கர்ம வினைப் பயன் என்று கூறப்படுகிறது. படிப்பதோ பாபம்—மதத்திற்கு விரோதம்.

தங்கள் அழிவிற்கும் — அறியாமைக்கும் காரணம் காணமுடியாதவாறு மாதரின் மதியை மயக்கி விதி என்னும் விலங்கோடு பிணைத்தனர் அவர்களது வாழ்க்கையை.

படிப்பு வளர்ந்தால் அறிவின் துணைகொண்டு, 'ஆணிற்கு ஏன் அடிமைப் பட்டோம்?' என்று ஆராயத் தொடங்குவாள். இல்லையேல் பொருளாதாரத் துறையில் புருடனுடன் போட்டியிடத் தொடங்குவாள். ஆணின் அடிமையாக இனி இருக்கச் சம்மதியாள். அறுத்தெறியத் தொடங்குவாள் தன் அடிமைத்தளையை!

இதனால்தான் பெண்ணின் அறிவிற்குத் தடையிட்டு, பொருளாதாரத் துறையைத் தம் மட்டிலும் நிரந்தரமாக்கிக் கொண்டனர். இதனால்தான் பெண்களுக்குச் சொத்துரிமை இல்லை.

பெண் வாலிபப் பருவம் எய்திவிட்டால், கொலைக்குற்றம் செய்தவனுக்கு விதிக்கப்படும் கடுங்காவல் தண்டனையைப் போல், அவளை வீட்டில் அடைத்து பெற்றோரே காவல் புரிகின்றனர்.

தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் திருமண முறையிலாவது பெண்களுக்குச் சிறிதேனும் சலுகை காட்டப்படுகிறதா?

பெற்றோரின் பிரியத்திற்கிணங்க அழகனோ—அசடனோ ஒருவனைக் கணவனாகக் கைப்பிடித்தல் வேண்டும். இது விஷயத்தில் தன் விருப்பு வெறுப்பைத் தெரிவிக்க எந்தப் பெண்ணிற்கும் உரிமை கிடையாது.

ஆடவன் அறுபது வயதுடையோனானாலும், விரும்பியபோது வேண்டிய பெண்களை மணந்து கொள்ளலாம்.

அக்கினி, அந்தணர், சாட்சியாக—மணமக்களின் மனசாட்சிக்குப் புறம்பாக—புரோகிதனின் புரட்டிற்குப் பஞ்சாங்கம் துணைபுரிய, பல்வேறு வாத்திய வகை முழங்க மாங்கல்யம் என்ற மஞ்சள்கயிற்றை மணமகன், மணமகளின் கழுத்தில் கட்டி அவளைத் தன் உரிமைப் பொருளாக்கிக் கொள்கிறான்.

குரங்கின் கையில் கிடைத்த பூமாலைதான், 'அவன் கையில் கிடைத்த அவள் நிலையும்'. சட்டம், திட்டம், அதிகாரம், வீரம் அனைத்தையும் அவளிடம்தான் காட்டுவான்.

கணவன்—மனைவி, வாழ்க்கைத் துணை, திருமணம் என்பதன் நற்பொருள் இம்மண முறையில் சிறி

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

விபூதி ஒரு லைசன்ஸ் எதற்கு?

சோதனைவிளக்கு

“மக்கள் பாவ கர்மங்கள் என்று சொல்லப்படும் துஷ்கிருத்தியங்களாகிய கொலை, களவு, பொய், விபசாரம், ஹிம்சை முதலிய காரியங்கள் செய்யக்கூடாது என்பதற்கும், செய்யப்பட வேண்டும் என்பதற்குமாகவே கடவுள் உணர்ச்சியும், மதமும், மதநூல்களான வேதம், புராணம், சாஸ்திரம் என்பவைகளும் மற்றும் பல சமய நூல்களும் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன” என்பது மத வாதிகள், ஆஸ்திகர்கள், பண்டிதர்கள், புராணக் காலட்சேபக்காரர்கள் ஆகியவர்களின் கூற்றாகும்.

ஆனால் இந்தக் கூற்றானது அறிவில்லாதவர்களும், காட்டுமிராண்டித்தனமான பிராயமுடையவர்களும் எவ்விதக் கெடுதியோ, பாதகமோ செய்ய சக்தி அற்றவர்களுமான மக்களுக்குத்தான் ஏதாவது சிறிது பயன்படலாமே ஒழிய மற்றபடி சாதாரண மனித சமூகத்துக்கு ஒரு சிறிதும் பயன்படாததோடு சக்தியும், சௌகரியமும் உள்ள அளவுக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பாவங்களையும், பாதகங்களையும் கெடுதிகளையும், இம்சைகளையும் மற்ற மக்களுக்குச் செய்யும்படியாகத் தூண்டக் கூடியதாகவே இருந்து வருகின்றது.

கடவுள் உணர்ச்சி, சாஸ்திரம், புராணம் முதலியவையானது மனிதனைப் பாவம் செய்யாமல் இருப்பதற்குப் பதிலாகப் பாவம் செய்யும்படியான தைரியமும், துணிவும் கொடுக்கும்படியாக இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கலாம்.

நமது புராணங்களும், கடவுள் தன்மைகளும், பக்தியின் லட்சணங்களும், கடவுள் பாவம் செய்தவர்களைத் தண்டிக்கும் என்பதைவிட பாவம் செய்தவர்களை மன்னிக்கும் என்பதையே மிகுதியும் வலியுறுத்திக் கூறுகின்றன.

அப்படிப்பட்ட மன்னிப்புகளும் கூட பாவமான காரியங்கள் செய்வதற்காக எடுத்துக்கொள்ளவேண்டிய சிரமத்தைவிட வெகு சுலபத்தில் கிடைத்துவிடும்படியான மாதிரியிலேயே கூறுகின்றன.

விபூதி.

உதாரணமாக விபூதி மகிமையைப்பற்றிச் சிவபெருமான் சொன்னதாகச் சொல்லப்பட்ட புராணத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

பிரமோத்திர காண்டம் என்பது சைவ சமயநூல் ஆகும். அதில் மக்களின் பாவ விமோசனத்துக்கான சாதனங்களே பெரிதும் சொல்லப்பட்டிருக்கின்றன. இப் புத்தகத்தில் உள்ள விஷயங்கள் பெரிதும் பரமசிவன் என்னும் கடவுளால் பார்வதி முதலியவர்களுக்குச் சொன்னதாகவும் அதுவே வேதத்தின் சாரமெனவும் வியாச ரிஷியாலும், சூத முனிவராலும் மக்கள் அறியும்படி செய்யப்பட்டதெனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அதில் திரி புண்டர அத்தியாயத்தில் விபூதி பூசுவதால் எப்படிப்பட்ட பாவங்கள் எல்லாம் தொலையும் — மன்னிக்கப்படும், என்பதை விளக்குகிறது.

அதாவது, ஷை அத்தியாயம் 33, 34-வது பாட்டுகள்.

பலத்தின்பெருமைமாமுனியே
பகரிலெவர்தாமறிவார்
நிலத்தின்மீதமானிடர்க்குமுத்திக்
கிதுபோனெறியுண்டோ
சொலற்குத்தகுநால்வருணத்தோர்
வருணாச்சிரமத்தொழில்
புரிவோர்
கலத்திற்கியையாவிழிகுலத்தோர்
கலன்பூண்மகளிர்கைமை
யுற்றோர்.

இபாவரேனுமித்தருமமியன்றகலத்
தியற்றுவரேற்
பாவமாயத்தனையறுத்துப்
பாரிற்பிறவிக்கடனீந்தித்
தேவர்போகம்பொன்னுலகிற்
சென்றுதுய்த்துச்சிவனருளை
நாவினாலும்வழுத்தரியமுத்தி
யின்பநண்ணுவரால்.

இதன் கருத்து:— விபூதியை அணிவதால் வரும் பயன் என்னவென்றால் அது நான்கு வருணத்தார்களும், நான்கு ஆச்சிரமக்காரர்களும், இழிகுல மக்களும், ஸ்திரீகளும், கைம் பெண்களும் ஆகியவர்கள் எவர்களாய் இருந்தாலும் விபூதியை நெற்றியில் மூன்று விரலகலமாகப் பூசிக்கொள்ளுவார்களேயாகில், சகல பாவங்களும் மன்னிக்கப்பட்டு சுவர்க்கலோகத்தில் தேவபோகத்துடன் பரமசிவனிடமே இருக்கும்படியான முக்தி பெறுவார்கள் என்பதாகும்.

பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதில் என்ன என்ன மாதிரியான பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதைப்பற்றிச் சொல்லுவதாவது.

35, 36, 37, 38, 39, 40-வது பாட்டுகள்.

கோறல்களவுகள்ளுண்டல்
குருவைப்பிழைத்தல் கூட்டென்
னத்
தேறும்பஞ்சபாதகத்தை
யொழியாதியற்றுஞ்சிறியோரு
மாறிலொன்று தரங்கொள்ளாத
நீதியியற்றியறமிகந்த
பாறுபடிவேன் மன்னவரும்
பயந்தோர்க்கொன்ற பாதகரும்.

செய்தநன்றி மறந்தோருந்
தீவைத்தில்லஞ்சிதைத்தோரும்
கொய்துபசுவைத் தின்றோருங்
கொண்டோர்ப்பிழைத்துத்
திரிந்தோரு
நொய்திற்கரிபொய்த்துரைத்தோரு
நோன்பையிகழ்ந்துநொடித்
[தோரும்
வைதுபழித்துப்பொய்யென்று
முன்னூலிகழ்ந்தவஞ்சகரும்

கருப்பம்வீழ்த்தித்திரிந்தோருங்
கலவாதவரைக்கலந்தாரும்
பரித்தவொருதேவனைவழுத்திப்
பலதேவரையும்பழித்தோரு
மருத்திவிடத்தாற்கொன்றோரு
மற்றார்க்கறாதுவதிந்தோரும்
விருத்தர்பாலர்மடவார்கண்டுங்க
வினைகள்செய்தோரும்.

அடைந்தோர்க்கருளாதிருந்தோ
ருமமரிலரசன்படைவெருவி
மிடைந்துவெரிகிட்டோடினரும்
வெறியகுறளைபகர்ந்தோரு

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

நடப்பும்—நாட்டமும்

ஈட்டி

இந்துஸ்தானம்:

முழுவதிலுமே நம் சுயராஜ்ய சர்க்கார் சுதந்தர ஆட்சி புரியத் தொடங்கியபிறகு, எங்கு பார்த்தாலும் லஞ்ச ஊழலும், நாணயக் குறைச்சலானநடத்தையும், சொந்தக்காரர்களே சுகபோக வாழ்வு வாழவேண்டுமென்கிற மந்திரிமார்களின் பரந்த போக்கும், மாறுபட்ட கருத்துடையவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தாறுமாறாகவெல்லாம் சித்திரவதை செய்யப்படுவார்கள் என்கிற ஆணவ நடத்தையும் கேள்வி கேட்பாடில்லாத நிலையில் நடைபெற்று வருகின்றன. என்றாலும்,

சென்னை, வங்காளம், பீகார் அய்க்கியமாகாணம்

என்கிற இந்தநான்கு மாகாணங்கள்தான் லஞ்ச ஊழலுக்கு 1-வது 2-வது 3-வது 4-வது பரிசு பெற்ற மாகாணங்கள் என்று காங்கரஸ்காரர்களால் பேசிக்கொள்ளப்படுகிறது. இதனால் மற்ற மாகாணங்கள் எல்லாம் பரிசுத்தமான—அப்பழுக்கற்ற மாகாணங்கள் என்பதாக அவர்கள் முடிவுகட்டியிருக்கிறார்கள் என்றில்லை. மற்ற மாகாணங்களும் அப்படி அப்படித்தான். இருந்தாலும் எல்லாவற்றிற்கும் முதல் பரிசு சென்னைக்குத்தான் என்பதாகவும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பரிசுகள் கல்கத்தாவுக்கும் பீகாருக்கும் அய்க்கிய மாகாணத்திற்கும் தான் என்பதுதான் அவர்கள் சொல்வதின் அர்த்தம் என்று கூறலாம்.

முதற்பரிசு

பெற்றிருக்கும் சென்னைக்கு, தோழர் தேவ் அவர்கள் வந்தார். விசாரித்தார். இது ஒருதலைப்பட்சமான விசாரணை என்பதாகத் தோழர் பிரகாசம் புகார் கூறினார். சட்ட விதிகளுக்கெல்லாம் மாறாக எப்படி 3-வது மனிதரான தேவுக்குத் தஸ்தாவேஜுகளையெல்லாம் காட்டலாமென்று சரமாரியாக எதிர்க்கட்சி மெம்பர்கள் சர்க்காரைக் கேள்வி கேட்டார்கள். "கொடுக்கவே இல்லையே, இது என்ன அபாண்டம்" என்றுபிரலாபித்தார்கள் நம் சென்னை சர்க்கார் கீழ் சபையில். ஆதாரங்களோடு காட்டிக் கேட்டபிறகு "சர்க்கார் தஸ்தாவேஜுகளைக் காட்டுவது எப்படித் தவறாகும்?" என்று அகங்காரத்தோடு கேட்டனர் அதே சென்னை சர்க்கார் மேல்சபையில். 'முன் பின் செத்திருந்தாலல்லவா சுடுகாட்டிற்கு வழி தெரியும்' என்று சமாதானம் சொல்கிறவர்களைப் பார்த்து என்ன பதில்சொல்லமுடியும்? ஏதோசொன்னார்கள், எப்படியோ சட்டசபைப் பிரச்னை தீர்ந்தது.

இரண்டாம் பரிசு

பெற்ற கல்கத்தாவுக்கு இந்துஸ்தானத்தின் பிரதம மந்திரியாரே நேரில் விஜயம் செய்தார். அதிகாரிகளையும் ஆளவந்தவர்களையும் தனித்தனியே கண்டார். தொழிலாளர்களையும் மாணவர்களையும் இல்லை, இல்லை அவர்களின் பிரதிநிதிகளையும் கண்டார், விசாரித்தார். இந்தக்காட்சியில் அவர் கண்ட உண்மையைக், காங்கரஸ் கமிட்டிக் கூட்டத்திலே பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். சர்க்காருக்கும் மக்களுக்கும் சம்பந்தா சம்பந்தமே இல்லை. சர்க்கார் ஒரு லோகம்! மக்கள் ஒரு லோகம்! இது தானே வங்கத்தின் நிலைமை என்கிறார் நேரு. லஞ்சப் புகாரைப் பற்றி பலவற்றுக்கு ஆதாரமில்லையே என்றும் அவர் அங்கலாய்க்கிறார். ஆதாரமிருந்தாலல்லவா ஆச்சரியம் ஆகும் என்று அங்கு ஒருவரும் கேட்கவில்லை போலும்!

கடைசியில்

நேரு அவர்கள் பொதுக்கூட்டத்திலே பேசினார். இந்தக் கூட்டமோ கல்கத்தாவில் 144 இருந்தபோது நடந்ததாகும். அது எப்படி அவர் என்ன 144அய் மீறினாரா என்று கேட்கிறீர்களா? அப்படியெல்லாமில்லை. அப்படி மீறுவதெல்லாம் அந்தக்காலம். இது இந்தக்காலம். இந்தக்காலத்திலே அந்த மகராஜன் ஏன் மீறப்போகிறார்? நம்ம ஊரிலே நாம் பார்த்ததில்லையா? "ஊரிலே கலகக்காரர்கள் குழப்பம் விளைவிப்பார்கள் என்று நம்பப்படுவதாலும், எதிர்பார்க்கப்படுவதாலும் இந்த ஊரைச் சுற்றிலும் 5-மைல் சுற்றளவுக்கு ஊர்வலமோ, கூட்டமோ, கோஷமோ யாரும் நடத்தக்கூடாது, போடக்கூடாது என்று நம் சில்லரைத் தேவதைகள் உத்திரவு போடுவதும், சில அநாமதேய ஆகஸ்டுகளுக்கு மட்டும் அது கிடையாது என்பதும் எந்த ஊரிலே நடக்காத சங்கதி? அப்படியிருக்க ஆகஸ்ட் முதல்வருக்கா அது கிடைக்காமல் போய்விடும். அந்த முறையில்தான் 144 இருந்த கல்கத்தாவிலே பிரதமர் நேரு அவர்கள் பேசினார்கள்.

அவருக்கு மட்டும்

என்ன விதிவிலக்கு? இவர் பேசுகிறபோது நாம் ஏன் பேசக்கூடாது? இவர் கூட்டத்திற்கு மட்டும் 144 இல்லையாம். ஆனால் மற்றவர்கள் கூட்டத்திற்கு அது உண்டாம்! இது என்ன நியாயம்? இது என்ன சட்டம்? இதையுந்தான் ஒரு கை பார்த்துவிடவேண்டுமென்று துணிந்தார்கள் வங்கத்தின் இள வீரர்கள் சிலர். இவர்கள் துணிச்சலை, யாராயிருந்தாலும் பாராட்டவேண்டியதும் வரவேற்கவேண்டியதும்தானே நியாயம்! எப்படியோ 2-ம் பரிசுபெற்ற வங்க சர்க்கார் அன்றைக்கு அதைத் தடுக்கவில்லை. நேரு ஒரு பக்கம் பேசினார், இடதுசாரிகள் ஒருபக்கம் பேசினர். நேரு கூட்டத்திற்கு 10-லட்சம்! இடதுசாரிகள் கூட்டத்திற்கு வெறும் ஆயிரம்பேர்! இது தேசீய ஏடுகளின் தர்மாமீட்டர்!

தர்மாமீட்டர்

சரியா? தவறா? என்பது ஒரு பக்கமிருக்கட்டும். சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஜவஹர் சண்டப்பிரசண்டம் செய்தார் என்பதும் ஒருபக்கம் இருக்கட்டும். "சர்க்காருக்கு வக்காலத்து வாங்கவரவில்லை" யென்று அவர் குண்டித்தைரியமாய் கூறியது ஒருபக்கமிருக்கட்டும். அவர் பேசிய கூட்டத்திலே "சிலர் குண்டு வீசினார்கள்" "ஒருவன் அவர் வரும் வழியில் ரிவால்வார் வைத்து நின்று கொண்டிருந்தான்" "குண்டர்களுக்கும் "ரவுடிகர்களுக்கும்" கைகலப்பு" என்றெல்லாம் காணப்படுகிற செய்தி இருக்கிறதே, இதை யார்தான்

வெறுக்கமாட்டார்கள்? இப்படியான மிருகச் செயலை—பலாத்காரத்தால் வெற்றிக்குப் பாதை அமைக்கும் முறையை ஆகஸ்ட்டு தானே கற்றுக்கொடுத்ததென்றாலும், அதாவது காங்கரஸ் தானே இந்த நாட்டு மக்களுக்குக் கற்றுக் கொடுத்ததென்றாலும், மற்றபொது மக்கள் இந்தப் போக்கை எப்படி ஆதரித்துவிட முடியும்? காங்கரசை குருவாகக்கொண்டு இந்தக் காலிகள் இந்தப்பாடத்தைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டாலும், இந்த மிருகச் செயலை எந்த நடுநிலையுள்ள மனிதன்தான் கண்டிக்கமாட்டான், வெறுக்கமாட்டான்?

ஆபத்திலிருந்து

தப்பிய நேருக்குப் பாராட்டு! அந்தக் குண்டர்களின் குண்டுக்குப் பலியான (அந்த) ஒருவருக்கு ஆழ்ந்த அநுதாபம்! ஒரு தோழர் இறக்க 40, 50 பேர் படுகாயமடைய, பலபேர் வெஞ்சிறையில் வாட, அதாவது இவ்வளவு பலி கொடுத்து, முதன் மந்திரியார் செய்த விசாரணையின் பலன் எந்த அளவுக்கு ஆகியிருக்கிறது என்று பார்த்தால், யாருக்கும் வயிறு எரியாமல் இருக்கமுடியாது. ஏதோ மக்களைத்,

திருப்திப்படுத்த

ஏதாவது ஒன்று செய்தேயாக வேண்டும் என்றுதான் அவர் கடைசியாக முடிவுகட்டியிருக்கிறார். இந்த முடிவுதான் நிலைமைக்கேற்ற பரிகாரமா என்பதில் அவர் சிந்தனை சென்றதாகத் தெரியவில்லை. அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் மாதிரியில் ஒன்றை காட்டவேண்டுமென்றுதான் அங்கேயே முடிவுக்கு வந்திருக்கிறாரே தவிர, உண்மையிலேயே அழுகை நிற்கவேண்டும்; அகம் மலரவேண்டுமென்பதிலே கொஞ்சமும் கவலையிருந்தது என்று சொல்லிவிடமுடியாது.

டெல்லியில்

காங்கரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம். சென்னையும் வங்கமும் ரொம்ப ரொம்ப அடிபடுகிறது. அதனால் சம்பந்தப்பட்ட மந்திரிகளில் எவரும் கவலைப்படுவதற்கு இடமிருப்பதாக யாராவது நினைத்தால் அது தப்பு என்றுதான் சொல்லவேண்டும். "ஏதோ இன்னும் விசாரணைக்கு இடமிருக்கத்தான் இருக்கு" என்பதாக சென்னையைப் பொறுத்த வரையில் தேவ் அங்கு கூறியிருந்தாலும், அந்தக் குற்றங்களைப் பகிரங்க விசாரணைக்குக் கொண்டுவரக்கூடிய தைரியமோ, நியாயமோ மேலிடத்திற்கில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஒருவேளை சென்னைமட்டும் விதிவிலக்காக, ஏன் பகிரங்க விசாரணைக்குக் கொண்டுவந்து விடக்கூடாது என்றால் என்ன பதில் சொல்லிவிட முடியும்? எத்தனையோ காரியங்களில் சென்னை என்றால் தனிப்போக்கு — தனிச்சட்டம் — தனி அளவான உணவு என்பதாகத்தானே நம் காங்கரஸ்காரர்களே குறை கூறுகிறார்கள். ஆகவே சென்னை பகிரங்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால்

வங்கத்திற்கும், பீகாருக்கும் அய்க்கிய மாகாணத்திற்கும் அந்த நிலை வரும் என்று யாராவது நினைப்பார்களானால் அதுபைத்தியகார நினைப்பே தவிர வேறென்ன? திராவிடநாடு ஆரிய நாடு என்பதாகக் காங்கரஸ்காரர்கள் பிரித்துப் பேசுகிறார்கள் இல்லை என்றாலும் தென்னாடு வடநாடு என்றுதானே, அவர்களும் பிரித்து எண்ணுகிறார்கள், பேசுகிறார்கள், நடத்துகிறார்கள். அப்படியிருக்க தென்னாடும் வடநாடும் சம எடையில் வைத்து நிறுக்கப்படும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? எப்படியோ போகட்டும்.

காங்கரஸ்

நாளுக்கு நாள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைக்குத்தான் வந்து கொண்டிருக்கிறது. இல்லாத போனால் பெருந்தலைகள் எல்லாம், இவ்வளவு ஊழல்களைக் கண்டு கேட்டு விசாரித்து முடிவுக்கு வந்த பிறகும்கூட, நீலிக் கண்ணீர் வடித்தாவது அதைப்பூசி மெழுகிவிடவேண்டும் என்றுதான் முடிவுக்கு வருவார்களா? இந்த உண்மையைத்தான்

டாக்டர் லோஹியாவும்

கூறுகிறார். இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் காங்கரஸ் தேரை யாருமே இழுக்க முடியாதபடி அது நிலைகுத்திவிடும் என்று அவர் முடிவு கட்டுகிறார். ஆனால் நேருவுக்குப் பதில் ஜெயப்பிரகாஷ் என்றால் பரிகாரமாகிவிடும் என்கிறாரே இதை யார் எப்படி ஒப்புக்கொண்டுவிட முடியும்? ஒரு ரூபாய்க்கும் 16 அணாவுக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறது என்றால் இப்போது யாராவது ஒப்புக்கொள்வார்களா? இல்லை ஒரு படிக்கும் 8 உழக்குக்கும்தான் வித்தியாசமிருக்கிறது என்றால் இப்போது ஒப்புக்கொண்டுவிடுவார்களா? அந்த மாதிரிதான் நேருவுக்குப் பரிகாரம் ஜெயப்பிரகாஷ் என்பதும்.

உடுமலைப்பேட்டையில்

ஒரே அமளி! "பெரியாரை ஈரோட்டில் சுட்டு விட்டார்கள்" என்கிற வதந்தி எப்படியோ கட்டிவிடப்பட்டு, இந்த மாதம் 15ம் தேதி பெரியாரவர்கள் உடுமலையில் 144 மீறிய வழக்குக்காக போனபோது ஒரே கூட்டம் கூடிவிட்டது. தவறான உணர்ச்சியின் விளைவாகப் பெரியாரவர்கள்மீது, தற்காலீகமாக வெறுப்புணர்ச்சி கொண்ட அப்பாவித் தோழர்கள் சிலர்கூட, "அய்யோ இப்படியா!" என்று அலறி விட்டார்களாம். முதல்நாள் மாலையில் ரேடியோவில் எல்லாம் பெருங்கூட்டம் கூடி எப்படி? எங்கே? என்று திகில் பட்டுக் கொண்டிருந்தார்களாம். நகரத் தந்தை தோழர் கனகராஜ் அவர்கள் உடனே ஈரோட்டு அதிகாரிகளை விசாரித்து, உண்மை தெரிந்து, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று அறிவித்த பிறகும் கூட கூட்டம் சமாதானமடையவில்லையாம். இந்தக் கூட்டம் மறு நாள் பெரியாரவர்களை நேரில் கண்டவுடன் வியப்போடு கூடுவதற்குக் கேட்கவா வேண்டும்? ஆனால் இப்படிக் கட்டிவிட்ட முதல் பிரகஸ்பதி யார் என்பது தான் தெரியவில்லை. ஏதோ இந்த அளவிலாவது அவர் திருப்தியடைந்து விடவேண்டுமென்று ஆசைப்பட்டிருந்தால், அந்த ஆசை நிறைவேறி விட்டதைக் கண்டு அவர் திருப்தியடைந் திருப்பாரல்லவா?

வளர்த்த கடா மார்பில் பாய்கிறது!

பெரியார் அவர்களை சிறை அழைக்கிறது!

உங்கள் கடமை என்ன?

★

(திராவிடர் கழக மத்திய திராவிட கழக மெம்பர்
தோழர் ப. ஷண்முகவேலாயுதன்)

பார்ப்பனர்களால்—குறிப்பாகக் காலஞ்சென்ற தோழர் சத்தியமூர்த்தி அவர்களால் பல மேடைகளில் "ஜஸ்டிஸ் கட்சியை இரண்டாயிரம் அடி, குழிதோண்டிப் புதைத்துவிட்டோம்" என வெற்றி முரசு கொட்டிய நேரத்தில்—ஜரிகைக் குல்லாய்களெல்லாம் தேர்தலில் படுதோல்வி யடைந்து, முக்காடிட்டுக்கொண்டு ஓடி ஒளிந்து கொண்ட நேரத்தில்—தலைவர் பெரியார் அவர்கள் சிறையிலிருக்கும் தருவாயில் அவரைத் தேடி சரணடைந்ததுதான் திராவிடர் கழகத் தலைமைப் பதவி. உண்மையைச் சொல்லவேண்டுமானால் திராவிடர் கழகத் தலைமைப் பதவியைப் பெரியார் அவர்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தினால், அவர் சற்று சமுதாயப் போராட்டத்தில் தயங்கிப்போக வேண்டியவராகிவிட்டார். இல்லையென்றால், சுயமரியாதை இயக்கத்தின் பேரால் நாட்டில் இன்னும் எவ்வளவோ வேகமாகக் காரியங்கள் செய்துகொண்டு போயிருக்க முடியும்.

நாதியற்றுக் கிடந்த கட்சிக்குத் தலைமைவகித்து- இன்று நாடாள்வோர் கண்டு நடுங்கும் நிலைக்குக் கொண்டுவந்தவர் நமது பெரியார் அவர்கள். இது யாருக்கும் தெரியாத ரகசியம் அல்ல. பின் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், இன்று ஏதோ பெரியார் கழகக் கொள்கைக்குப் புறம்பாக நடந்துவிட்டதாகக் கூறிக்கொண்டு—எதிர்ப்பு வேலையிலிறங்கியிருப்பவர்கள், பெரியார் தலைமையில் கழகம் ஏற்பட்டபின்னர்தான் வெளியில் விலாசம் தெரிகிற யோக்கியதைக்கு வந்தவர்கள். கழகத்திற்குப் பெரியார் தலைவராகாமல், பழைய ஜரிகைத் தலைப்பாகைக்காரர்களிடமே கட்சி இருந்திருக்குமானால், கட்சிக் கமிட்டிக் கூட்டம் நடக்கும் மாளிகையின் வெராண்டாவில் நிற்கக்கூட அனுமதிக்கப்பட முடியாத நிலையிலிருந்தவர்களைத்தான், பெரியார் அவர்கள் தன்னிடம் தலைமைப் பதவி வந்தவுடன் சன்னஞ்சன்னமாக சமயம் வாய்க்கும்போதெல்லாம் பணக்காரர்களும், பதவி மோகக்காரர்களும் ஜீரணிக்க முடியாத கொள்கைகளைக் கழகத்தில் புகுத்தி, பணக்கார, பதவி மோகக் கும்பல்களையெல்லாம் ஒழித்து, வெகு பரிசுத்தமாக உண்மைத் தொண்டர்கள், ஊழியர்களுக்குப் பிரதான இடமும், பொதுமக்களிடத்தில் பிரமாதமான விளம்பரமும் கொடுத்து "பெரிய மனிதர்" களாக்கினார்.

சற்று பச்சையாகவே சொல்ல வேண்டுமானால், மற்ற எந்தக் கட்சியிலும், எத்தனையோ வருஷங்கள்—எத்தனையோ தியாகங்கள் செய்தவர்களுக்குக் கூடக் கிடைக்காத மரியாதை, கௌரவம் பல சாதாரணத் தோழர்களுக்கெல்லாம் கழகத்தின்பேரால் கிடைக்க முடிந்தது என்றால், அது யாரால் என்பதைப் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் சற்று நெஞ்சில் கைவைத்துப் பார்த்து சிந்திக்க வேண்டுகிறேன்.

இவ்வளவு தூரம் பீடிகை போடுவதன் நோக்கம் என்னவென்றால், இப்போது ஏதோ பெரியார் அவர்கள் புதுமோகத்தில்—கொள்கைக்கு மாறாக—மணியம்மையைப் பொருந்தாத் திருமணம் செய்து கொள்ளப் போகிறார் என்று பதறியும், "கண்ணீர் சிந்தியும்" கண்டபடியெல்லாம் பேனாமுனையில் போர் துவக்கினவர்கள் முதலில் தங்கள் தங்கள் சொந்த வாழ்வு நிலை-பொதுநல வாழ்வில் செய்த "தியாகம்"—இவைகளைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகவேயாகும்.

பெரியார் அவர்கள் எவ்வளவோ சொல்லடி, கல்லடிகளெல்லாம் பட்டுக்கொண்டு சுயார்ஜிதமாய் சம்பாதித்துச் செல்வாக்குடன் விளங்கத்தக்க யோக்கியதைக்கு கழகத்தைக் கொண்டுவந்திருப்பதினால், "கிடாய் மறைப்பில் புல் மேய்கிறமாதிரியில்" இன்று எவர் வேண்டுமானாலும் வீராதி வீரர்களாய்—சூரப் புலிகளாய்—கனல் கக்கிகளாய் கழகத்தில் விளங்க முடிகிறது.

இந்நிலையில் சென்ற சில வருஷங்களாகவே, பெரியார் அவர்களைத் தலைவராக ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், பொதுமக்களிடம் பெரியார் அவர்களுக்குள்ள அசைக்கமுடியாத செல்வாக்குக்குப் பயந்துகொண்டே "பெரியார் வாழ்க! பெரியார் வாழ்க!!" என்று வாயாரக் கூறிக்கொண்டிருந்த போதிலும், உள்ளுக்குள் அவரது போக்குப் பிடிக்காமல்—ஆனால் வெளியில் சொல்லத் தைரியமில்லாமல்—சாப்பிடுகிற இடத்தில், சிட்டாடுகிற நேரத்தில் எல்லாம் பெரியார் போக்கைக் கிண்டல் செய்வதையே பொழுதுபோக்காக விளையாட்டுப்போல் வினையமாகவே ஒரு சிலர் செய்துகொண்டு வந்தார்கள்.

அப்பேர்ப்பட்டவர்களின் நினைப்பெல்லாம் "பெரியாருக்கோ வயசாகிவிட்டது. இன்னும் எத்தனைநாளைக்கு இருந்துவிடப் போகிறார்? இருக்கிறவரைக்கும் பெரியார் வாழ்க! பெரியார் வாழ்க! என்று கூறிக்கொண்டே காலம் தள்ளிவிட்டால், அவர் கண்ணை மூடியதும் அவர் சம்பாதித்து வைத்துவிட்டுப்போன கழக வளர்ச்சியை அப்படியே ஸ்வாதீனப் படுத்திக்கொண்டு "பிளாக் மார்க்கெட்" செய்து கொள்ளலாம்; அதாவது தேர்தலுக்குப் பயன் படுத்திப் பதவிக்குச் சுலபமாகச்

(தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

குடி அரசு

23—7—49 சனிக்கிழமை.

"காங்கரசைக் கலைத்துவிடுவதே நலம்"

காங்கரசின் மீது துவேஷமுடையவர்கள் என்று, தவறாக நம்மீது குற்றஞ்சுமத்தப்படும் நிலைக்கு ஆளாகியிருக்கும் நாம் கூறுவதல்ல இது. காங்கரசினால் அசல் ராம ராஜ்ஜியத்திற்கு, அதாவது பச்சை வர்ணாச்சிரமத்துக்கு இடம் கிடைத்தும் அது பூர்ணமாக இல்லாது போய் விட்டதே என்று வேதனைப்படும், விஷப்பாம்புகளின் அய்க்கியமான இந்துமகாசபையினர் கூறுவதுமல்ல. நாடு முழுவதும் நம்மை வெறுத்தொதுக்கினால், நாளை நமக்குப்பின் நம் ஆட்களாயிருந்து நாட்டை ஆள வேண்டுமே என்று திட்டம் போட்டு, அதற்காக இன்றைய ஆளவந்தார்களால் தயாரிக்கப்பட்ட சோஷியலிஸ்டுகள் கூறுவதல்ல இது. கொள்ளைக்காரர்களாகவும் கொலைகாரர்களாகவும் காங்கரஸ்காரர்களால் பேசப்பட்டு வரும் இந்தியக் கம்யூனிஸ்டுகளால் கூறப்பட்டதுமல்ல. இந்துஸ்தானத்தின் பிரதம மந்திரி தோழர் ஜவஹர்லால் அவர்கள் லக்னோ காங்கரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இந்த மாதம் 18ம் தேதி திருவாய் மலர்ந்தருளியது இது!

பண்டிதரவர்கள் எவ்வளவு தான் மூடிவைக்க வேண்டுமென்று, எத்தனையோ ஜால வித்தைகளெல்லாம் செய்து பார்த்தபிறகுதான் இந்த முடிவுக்கு வருத்தத்தோடு வந்திருக்கிறா. எங்குபார்த்தாலும் லஞ்சக் காட்சிகள்! எங்கு திரும்பினாலும் லஞ்சப் புகார்கள்! இவற்றைக் கண்டு கூட அவர் திடுக்கிடவில்லை என்பதைத்தான் அவரின் பேச்சுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இத்தகைய காட்சிகள், புகார்கள் எப்படி வெளிவருகின்றன? ஏன் வெளிவருகின்றன? என்பதில் தான் பண்டிதருடைய கவனம் சென்றிருக்கிறதோ என நாம் நினைக்கவேண்டியிருக்கிறது.

காங்கரசின்பேரால் பதவிக்கு வந்தவர்கள், நாணயக்குறைவாகவும் லஞ்ச ஊழலுக்கு இடம் கொடுத்தும்தான் நடந்துகொள்வார்கள். நாணயமற்றமுறை அவர்களுக்குத் தெரியாது என்கிற முடிவுக்கு வந்துவிட்டாரோ? என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

காங்கரஸ்காரர்களைப் பற்றிப் புகார்கள், இப்படிப் பச்சை பச்சையாக வெளிவருவதற்குக் காரணம், காங்கரஸ்காரர்களுக்குள் பொறாமையும் போட்டியும் வலுத்து, பிளவு ஏற்பட்டு கோஷ்டிகள் உண்டாகியதால் அல்லவா? என்கிற ஒரு விஷயத்தில்தான் அவரின் கவனம் சென்றிருக்கிறது.

இடைக்காலத் தேர்தலுக்குப் பின் வங்கத்தில் பங்கமடைந்து விட்டது காங்கரஸ் என்பதை மறைக்கமுடியாது போன பிறகு—அதிலும் வங்க சர்க்காரின் வண்டவாளங்கள் மறைக்கமுடியாத நிலையில் அம்பலமாகிவிட்ட பிறகு, பண்டிதரவர்கள் வங்காளத்திற்கு நேரில் போனார். நிலைமையை நேரில் கண்டார். டில்லி காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அதை விளக்கினார். அந்தக் கூட்டத்திற்கு இடையிலேயே அய்க்கிய மாகாணம் சென்றார். அங்குதான் பேசியிருக்கிறார் "காங்கரஸ் கட்சிக்குள் எதிர்ப்பு உணர்ச்சிக் கோஷ்டிகளை வளரவிட்டுப் பிளவு படுத்துவதைக் காட்டிலும், காங்கரசைக் கலைத்துவிடுவதே மேல்" என்பதாக.

வெள்ளையரின் வெளியேற்றத்திற்குப் பிறகு, நாடு நாளுக்கு நாள் கேவல நிலையையே அடைந்து கொண்டிருக்கிறது. ஏழை உழைப்பில், ஏற்றங்கொண்ட சிறு கும்பல் இன்னும் வாடாமல் வதையாமல், நாளுக்குநாள் புது மெருகு பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்பதாக, இந்துஸ்தானத்தின் மற்றொரு மந்திரியான சாக்சேனா கூட ஒப்புக்கொள்கிறார்.

இந்த நிலைமை ஒழிக்கப்படாவிட்டாலும், மேலும் மேலும் கேடடைந்துகொண்டே போவதற்குக் காரணம்; அநுபவம் இல்லாமையும், அறிவுக்கு மதிப்பளிக்காமையும் கொண்ட தன்னலமிக்க சிலரை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தி, மேலிடம் அவர்களைப் பதுமையைப்போல், ஆட்டிவைப்பதினுடைய விளைவுதான் என்பது இன்று உலகம் பகிரங்கமாகத் தெரிந்துகொண்ட உண்மை.

இந்த நிர்வாக ஊழலை மறைப்பதற்காக அல்லது இந்துஸ்தானின் பாதுகாப்பு என்கிற மிரட்டலுக்குப் பயன்படுவதற்காகத்தான், சுயராஜ்ஜியத்தையே லட்சியமாகக் கொண்ட காங்கரஸ், அந்த சுயராஜ்ஜியத்தை அடைந்த பிறகும் இருந்துகொண்டிருக்கிறது என்பதை, காங்கரசால் சொந்தத்துக்குப் பயனடைந்து கொண்டு வரும் ஒரு சிலரைத் தவிர, மற்ற எல்லோரும் நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

சுயராஜ்ஜிய லட்சியத்தை அடைந்த காங்கரஸ், பார்க்கப்போனால், இயற்கையின் பரிணாமப்படி ஒரு நடைப்பிணம்தான்.

இந்த நடைப்பிணத்தைத்தான், அழித்துவிடவேண்டியது என்று கூறுகிறார் நேரு. நடைப்பிணத்தின் கையாலாகாத தன்மையையும், அதனால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அவஸ்தைகளையும் உணர்ந்து, அதனால் அதை அழித்துவிட வேண்டுமென்கிற முடிவுக்கு வந்திருப்பாரேயானால், அது உண்மையிலேயே பாராட்டுவதற் குரியதுதான். ஆனால் பண்டிதரவர்கள் கலைத்துவிடும் முடிவுக்கு வந்தது வெறும் மிரட்டலுக்கே தவிர வேறு எதற்கும் இல்லை.

"நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் காங்கரஸ் பலவழிகளில் கீழ்நோக்கிவிட்டது......காங்கரசுக்குள்ளேயே பலவீனம் ஏற்பட்டு, குறுகிய நோக்கமுடையவர்கள் நிரம்பிவிட்டதினால் இந்த நிலை" என்று கூறும் நேரு அவர்கள், "கலைத்துவிடுது நலம்" என்று கூறுவதின் உண்மையைப் பார்த்தால்,

"ஏதோ சிலபேர்மட்டும் சுயராஜ்ஜிய சுகமனுபவிக்கிறார்கள்,

ராஜா முத்தையா
நூலக அறக்கட்டளை

காங்கரசில் பாடுபட்டிருந்தும் பலருக்கு அதில் பங்கு இல்லை என்கிற பொறாமையால், காங்கரசின் பேரால் பதவியிலிருப்பவர்களின் வண்டவாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களே! எல்லோருமே சுயராஜ்ஜிய சுகத்தைப் பரிபூர்ணமாக அநுபவிக்கிறதென்பது சாத்தியதா? ஒருவர் மாறி ஒருவர் என்கிற வரிசையிலேதான் பயன்படும். அதற்குள் இப்படி அவசரப்பட்டால் அது எப்படி? வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்கிறீர்களா? அல்லது நீங்கள் பங்கு கேட்பதற்கு உரிமையென்று கருதிக்கொண்டிருக்கும் அந்த நடைப்பிணத்தையேநாசஞ்செய்துவிடவா?''

என்கிற அர்த்தத்தைத் தவிர—மிரட்டலைத் தவிர வேறு என்ன என்பதாகக்கூற முடியும்?

இது மிரட்டல் அல்ல என்றால், பண்டிதரவர்களுடைய கவனம்—மேலிடத்தின் முயற்சி, முதலில் எதில் பாய்ந்திருக்கவேண்டும்? காங்கரசில் உள்ள கோஷ்டிகளை ஒழிப்பதிலா? காங்கரஸ் போர்வையில் நடந்து, நாற்றமடித்துக் கொண்டிருக்கும் ஊழலை ஒழிப்பதிலா? என்று கேட்கிறோம்.

எப்படியோ நடைப்பிணத்தை நாசமாக்கினாலும் சரி, கோஷ்டிகளையெல்லாம் உருக்கி ஒரே அச்சாக வார்த்து விட்டாலும் சரி. அதைப்பற்றிக் கவலை இல்லை. முதலில் நாற்றத்தை அகற்றி விடுங்கள்! இதுதான் இப்போது நாட்டு மக்களின் கவலை தோய்ந்த வேண்டுகோள்! ஆனால் நாற்றம் அகற்றப்படுமா? நாடு சுகப்படுமா?

ஜாமீன் 3000 கட்டப்பட்டது.

ஈரோடு, ஜூலை 21.

சென்னை சர்க்கார் நம் ''குடி அரசி''ன் மீது கேட்டிருந்த ரூபாய் 3000மும், அச்சிட்டு வெளியிடும் ஆசிரியரான தோழர் கரிவரதசாமி அவர்களால், இன்று காலை 11 மணிக்கு ஈரோடு சப்-டிரஸரியில் கட்டப்பட்டது.

தோழர்களே! எது பொருந்தா மணம்?

★

–[கைவல்யம்]–

பெரியார் அவர்களின் கலியாணத்தைப் பெரும் குற்றமாகச் சொல்லுகிறோம். வயதுப் பொருத்தம் வாலிபப் பொருத்தமில்லாத கல்யாணங்களைஎழுத்திலும் பேச்சிலும் குற்றம் சொல்லி வந்திருக்கிறோம். முப்பது வயதிற்கும் எழுபது வயதிற்கும் அதிக வித்தியாசம். அப்படியிருக்க நம் தலைவரே இந்தவிதமான கலியாணம் செய்து கொண்டால் அது குற்றத்திலும் பெரியகுற்றமென்று சொல்லுகிறோம். நெடுநாள் உங்களைச்சேர்ந்தவனாதலினால் என் அபிப்பிராயத்தையும் சொல்லுகிறேன். உங்கள் எண்ணத்துடன் இதையும் ஆலோசித்துப் பாருங்கள்.

வயதான கலியாணங்களை ஏன் குற்றம் சொல்லுகிறோம்? அதிலுள்ள துன்பங்களினால். அதாவது போக போக்கிய சுகக்குறைவு, சுவாந்திரியமாக இருப்பதிலுண்டாகும் தடைகளினால் ஏற்படும் தொல்லை, வயதானவர்களின் சமீப மரணம் முதலியவைகள் அதிலிருப்பதால் பெண்ணிற்கு எந்த விதத்திலும் மன நிம்மதியில்லை. எல்லாம் துக்கமாகவேயிருக்கிறது. அதனால் இவ்வித கலியாணங்களை பொருந்தாக்கலியாணமென்கிறோம். பொருந்தாக் கலியாணத்திற்கு துக்ககாரணமாகவிருக்கும் விஷயங்கள் பெரியார் கலியாணத்தில் எவ்வளவு பொருந்தியிருக்கிறதென்பதை ஆலோசிப்போம்.

பெரியார் கலியாணம் பொருந்தாக் கலியாணமல்ல. பொருந்தும் கலியாணமென்பதே என் எண்ணம். இந்தக் கலியாணத்திலுள்ள எல்லாவற்றையும் பொருத்திப் பார்த்தால் 30-வயது, 70-வயது என்கின்ற கணக்கு குற்றமாக முன்னால் தோன்றுமேயல்லாமல், எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் வயதின் குற்றம் அடங்கிவிடுகிறது. பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் வயதின் குற்றத்தைப்பற்றின கவலையே இல்லை. பெண்ணின் சுற்றத்தாரோ அறிமுகக் கூட்டமோ, பெண் கிழவனுக்கு கொடுக்கப்பட்டு விட்டதே என்று கவலைப்படுகிறவர்களோ, அங்கலாய்க்கிறவர்களோ யில்லை. பெரியாரிடம் எல்லா வசதியும் பெருமையும் இருக்கிறதென்பதை நேரில் கண்டு அனுபவிக்கிறபெண்; பெரியாருடைய பிரியத்தை தன் ஊழியத்தால் வசப்படுத்திக் கொண்ட பெண்; நாணம், கூச்சம், அருவை, அருவெறுப்பு எல்லாம் விட்டு ஆறு வருடம் அன்னியோன்யமாகப் பழகினபெண்; குமாஸ்தா வேலையிலிருந்து சமையல்காரி வேலை வரையிலும் வெறுப்பில்லாமல் பிரியத்தோடு செய்து வருகிற பெண்; பெரியாரிடம் வருகிறவர்களை உபசரிப்பதிலும் முகம் சுளிக்காத பெண்; பெரியாருடைய செட்டும், சிக்கனமும் தெரிந்து கொண்ட பெண். நவநாகரீகமுமில்லை, விருப்பமுமில்லை. பெரியாரிடம் பக்தியும் பிரியமுமிருந்தாலொழிய அபிப்பிராயத்தாலும் நடிப்பாலும் முடியாதகாரியம். ஆறு வருடமாக நடித்து வருவது சாத்தியமில்லை. குற்றம் காணும் பெரியாரை ஏய்ப்பதும் சுலுவல்ல. ஆனதால் இதில் உண்மையான பிரியமும் நட்புமிருக்கவேண்டும். மறைப்பும் ஏமாற்றுமொன்றுமில்லை. பக்குவமாகிப் பதினேழு வருடம் சென்ற பெண்ணிற்கு உலக சங்கதிகளில் எது தெரியாமலிருக்கும்? முப்பதும் எழுபதும் உள்ள கணக்கில் போக சுகங்கள் குறைவுபடுமே என்கின்ற விஷயம், ஆறு வருடம் அன்னியோன்யமாக பழகின ஆணுக்கும் பெண்ணிற்கும் தெரியாத கணக்கும் திருப்தியும் நமக்கு எப்படித் தெரியும்?

வீண் வம்புக்கு நாமேன் போக வேண்டும்? பெண் கவலையற்று திருப்தியோடு சந்தோஷமாக இருக்கிறது. அதைப் பார்க்கிறோம். எதையோ நினைத்துக்கொண்டு எதையோ பேசுவது நியாயமா?

ஆண் விஷயம், வயது சென்ற காலத்தில் தன்னைப் போஷிக்கத் தகுந்த இடம் வேண்டும். அதற்கு தகுந்த ஒரு பெண்ணும் கிடைத்தது. அதற்குத் தகுந்த ஒரு பெண்ணும் கிடைத்தது. 'அன்னை தயவும், அடியாள் பணிவும்' என்றபடியாகவும் கிடைத்தது. அது பெரியார் பட்ட கஷ்டத்திற்கு ஏற்ற கூலியென்றே சொல்ல வேண்டும். பெரியார் நோய்வாய்ப் பட்டால் உபசரணை செய்ய எத்தனையோ பேர்களிருக்கிறார்கள் என்கிறது 'திராவிட நாடு' பத்திரிகை. வாஸ்தவம்தான். அல்வாவும் ஆரஞ்சும் வாங்கிக்கொடுக்க உபயோகப்படும். அறை சொரிந்தால் அதைத் தெரிந்து சொரிகிறவர்கள் யார்? நர்சுக்குப் பகல் இருபது, ராத்திரி இருபது கொடுப்பதற்கு, பெரியார் பெட்டிச்சாவியை எடுத்துக்கொள்ளும் வார்சுகளுக்குப் பெரிய கஷ்டமல்லவா? இதெல்லாமொருபுறமிருக்க, பெரியார் கலியாணத்தின் காரணத்தைப் பெரியார் விளக்கி எழுதிவிட்டாரே. காணப்படும் பொருள்களில் மகன் பிரியமாம், மகனிலும் உடல் பிரியமாம், உடலிலும் உயிர் பிரியமாயிற்றே. அதைக் காப்பாற்ற இந்த வழி அவருக்குத் தோன்றிற்று. அந்த வழியும் தகுந்தபடி அமைந்தது. அதில் நமக்கென்ன நஷ்டம்? குடும்பத்தாருக்குக் கவலையிருக்கலாம். குடும்ப அன்னியோன்யமும் விவகாரங்களும் நமக்கென்ன தெரியும்? குடும்ப தர்ம சொத்தில் மாதம் 3000 ரூபாயும், அதற்கு மேற்பட்ட இரண்டு மூன்று லட்சமுமிருக்கிறது. அதுவுமல்லாமல் கழகப பணமுமிருக்கிறது. இவைகளையெல்லாம் சரியான வழியில் நிலைநிறுத்த அவர் சில நாள் இருக்கத்தானே வேண்டும். முக்கியமானவர்களின் எச்சரிக்கையாலும், தான் கண்ட சில சம்பவங்களாலும் பயந்தார். ஒரு வார்சை உண்டுபண்ணிக்கொண்டார். அதனால் நமக்கெல்லாம் என்ன கஷ்டநஷ்டம்? மணியம்மை பின்னால் கைகட்டி சேவைசெய்ய யாரையும் சொல்லவில்லை. எந்த ட்ரஸ்டியிலும் தன் ஆள் ஒருவரை நியமிப்பது வழக்கம்தானே. உழைப்பும், புத்தியுமுடையவர்கள் பெரியவர்களாகிறார்கள். பழைய ஏட்டுப் பிரதியிலிருந்து பார்த்துப் படித்து, எழுது, பேசு என்று பெரியாருக்கு யாராவது பழைய ஏட்டை பெரியார் கையில் கொடுத்தவர்களுண்டா? எல்லாம் ஆலோசித்துப் பாருங்கள்.

பெரியார் மனதில் உண்மை என்று பட்டதைக் கண்டிப்பாய் பேசுகிறவர், எழுதுகிறவர். அவருடைய அந்தப் பேச்சிலும் எழுத்திலும்தான் சுயமரியாதைச் சங்கமும் திராவிடநாடும்உண்டாயிற்று; ஒரு ரூபமாகத் தோன்றிற்று. அதைச் சிதைக்க நாம்தான் பலதைப பேசுகிறோமே ஒழிய கலியாணம் ஒன்றும் செய்யவில்லை. நம்மையுமொன்றும்செய்யாது; கழகத்தையும் ஒன்றும் செய்யாது. நம்மில் எத்தனையோ வீரர் சூரர்களிருக்கையில் கலியாணம் கழகத்தை எப்படித் தூக்கிக்கொண்டுபோக முடியும்?

ஈரோடு தேவஸ்தானத்தை பத்தொன்பது வருடம் பார்த்துவந்தார். அம்பதினாயிர ரூபாய் மிச்சப்படுத்தினார். பின் பட்டக்காரரிடம் ஒப்புவித்தார். பழையகோட்டைப் பட்டக்காரர் செலவு செய்தார். லோபி என்கிற பெயர்தான் பெரியாருக்குக் கிடைத்தது. கழகப் பணத்தில் ஒருகாசுகூட அனாவசியமாகச் செலவு செய்திருக்கமாட்டார். சுயமரியாதை சங்கத்தைப்பற்றியும், திராவிடர் கழகத்தைப்பற்றியும் நமக்கெல்லாம் எவ்வளவு தெரியுமோ அவ்வளவு மணியம்மைக்குத் தெரியும். தெரியாததைச் சொன்னால் தெரிந்துகொள்ளும் புத்தியுமிருக்கிறது. இஷ்டம்போல் பேசவும் எழுதவும் வேண்டாம். அதில் நமக்குநன்மை இல்லை.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

செல்லலாம் என்று நம்பிக்கொண்டே, கட்சியிலிருந்து விலகாமலும், கட்சியில் மனப்பூர்வமாகப் பெரியார் அவர்களுடன் ஒத்துழைக்காமலும் இருந்துவந்தார்கள்.

"துரதிர்ஷ்ட வசமாக"ப் பெரியார் அவர்களுக்கு மணியம்மையின் உதவி கிட்டிவிட்டது. இன்று மணியம்மை-பெரியார் திருமணத்தை மகாப்பிரமாதமாக எதிர்க்கிறவர்களில் பலரது வாயாலேயே "மணி மட்டும் இல்லாமலிருந்தால், அய்யா வெகு நாளைக்கு முன்னாலேயே செத்திருப்பார். அய்யா உயிரோடு இருப்பதற்குக் காரணம் மணியின் உபசரணை—ஊழியம் என்பதில் சந்தேகமே இல்லை" என்று கூறக்கேட்டிருக்கிறேன். உண்மையில் பெரியார் அவர்களுக்கு சென்ற சில வருஷங்களாக அரும்பெரும் துணைவியாய் விளங்கி வந்தவர் மணியம்மை என்பதை யார் மறுக்கமுடியும்? அப்படியானால், சட்டபூர்வமாகத் துணைவியாக்கிக்கொண்டதில் தவறு என்ன?

கொள்கைக்கு மாறானது என்கிறார்கள். நமது கொள்கை என்ன? ஊரார் சம்மதமெல்லாம் பெற்றுத்தான், கட்சிக்கமிட்டியில் பாஸ்செய்துதான் கழகத்தில் உள்ளவர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானமாகியிருக்கிறதா? பொருந்தாத் திருமணம் என்று நாம் சொல்லிவந்ததெல்லாம், வயது வித்தியாசத்தால் மனம் ஒப்பாத பெண்ணை வலிய ஒரு கிழவனுக்குக் கட்டிக் கொடுக்கக்கூடாது என்பதுதானே? சுயமரியாதை இயக்கத்திலாகட்டும்—திராவிட கழகத்திலாகட்டும்—எந்த மகாநாட்டில் "இத்தனை வயசு வித்தியாசமுள்ளவர்கள் அவர்கள் விரும்பினால்கூடக் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது" என்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது? கொள்கைக்கு முரணாகப் பெரியார் நடந்துவிட்டார்—எனவே அவர் தலைமையை ஏற்கமாட்டோம்—விலகி நிற்கிறோம் என்று கூறுகிறார்களே தவிர, எப்படிக் கொள்கைக்கு முரணானது என்பதை எவராவது தெளிவுபடுத்தியிருக்கிறார்களா?

வாதத்துக்காவது பெரியார் திருமணம் கொள்கைக்குப் புறம்பானது என்றே வைத்துக்கொள்ளுவோம். அதற்கு என்ன செய்ய வேண்டும்? ஏதோ ஒரு ஊர்க்கிளைக் கழகம் கூடித் தீர்மானம் செய்து எல்லா ஊர்களுக்கும் நோட்டீஸ் அச்சடித்து அனுப்பி—ஆங்காங்கு ஆள்களையும் அனுப்பி தீர்மானங்களைப் போடச்செய்வதுதான் முறையா? நல்லெண்ண

ராஜா முத்தையா நூலக அறக்கட்டளை

முள்ளவர்கள் செய்யக்கூடிய காரியமா இது? இவர்கள் பேசுகிறார்கள் பெரியார் போக்கு ஜனநாயகத்துக்குப் புறம்பானது என்று.

ஜனநாயகம் பேசுகிற இவர்கள் நோட்டீஸ் அச்சடிப்பதும், பத்திரிகையில் பத்திபத்தியாய்த் தான்தோன்றித்தனமாய் கற்ற வித்தையெல்லாம் கொட்டி எழுதுவது தான் ஜனநாயகமா? நேர்மையுள்ளவர்களானால், மத்திய நிர்வாகக் கமிட்டியைக் கூட்டும்படி நிர்வாகத் தலைவருக்கல்லவா முதலில் தெரிவிக்கவேண்டும்? அந்தப்படிகமிட்டி கூடி ஒரு முடிவு காணும்வரை—ஒரு முடிவு தெரிவிக்கும்வரை அவரவர்கள் சொந்த அபிப்பிராயங்களை வெளியில் தெரிவிப்பது யோக்கியமான காரியமா? பெரியார் அவர்களை எதிர்ப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது—இனி இப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்காது என்ற முடிவில் திடீரெனக் கோதாவில் இறங்கியிருப்பதைத் தவிர இதற்கு வேறு என்ன சமாதானம் சொல்லமுடியும்?

மணியம்மை பெரியாரின் மனைவியாக இருந்துகொள்ளட்டும்; ஆனால்இயக்கத்தில் இடம்கொடுக்கலாமா? என்கின்றனர். இப்போது இந்தக் கேள்வியைக் கேட்கும் அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள்—மணியம்மையை இயக்கத் தினசரி 'விடுதலை'யின் ஆசிரியராகவும், பிரசுர கர்த்தாவாகவும், அச்சிடுவோருமாகச் செய்த தேதியிலிருந்து இதுவரைஏன் வாய்மூடி மௌனிகளாயிருந்தனர்? மணியம்மையாரை திராவிடக்கழக மத்திய நிர்வாகக் கமிட்டி மெம்பராக்கியபொழுது எப்படி ஒப்புக்கொண்டு பேசாமல் இருந்துவந்தார்கள்? அப்பேர்ப்பட்டவர்களில் ஒருசிலர் தான் இப்போது வெகு கெடுபிடியாக எதிர்க்கிறார்கள். அதுவும் இதுவரை பெரியார் அவர்களுக்குப் "பாடிகார்டு" போல் விளங்கிவந்தவர்கள்தான் மணியம்மை திருமணத்தை எதிர்க்கிறார்கள். இவர்கள் எதிர்ப்பதைப் பார்க்கும் போதுதான் மிக வேடிக்கையாய்—அதே சமயத்தில் பரிதாபமாய்க் கூடத் தோன்றுகிறது.

ஏன்? இந்தப் பிரகஸ்பதிகள் அய்யா அவர்களைச் சதா சுற்றித்திரிந்துகொண்டிருந்த நோக்கம் எல்லாம்—அய்யா அவர்களுக்குத் தனிமையில் செல்லக் கூடாது எனப் பயமுறுத்தி அந்த எண்ணத்தை வளர்த்துவந்ததின் நோக்கமெல்லாம், அய்யா காலம் வரை இப்படியே நடித்துவந்தால் அய்யாவுக்குப்பின் மணியம்மை தங்களைத்தானே நம்பும். அப்போது மணியம்மைபேரிலுள்ள சொத்துக்களுக்கெல்லாம் தாங்கள் தானே தர்மகர்த்தா என்றெல்லாம் மனப்பால் குடித்திருக்கக்கூடும்; மனக்கோட்டை கட்டியிருக்கக் கூடும். இந்தத் திருமண ஏற்பாட்டால் அவைகளெல்லாம் மணல் கோட்டையாகிவிட்டதைப் பார்க்கும்போது அவர்களுக்கு ஆத்திரம் வரத்தானே செய்யும்? இதில் அதிசயம் எதுவும் இல்லை.

இதெல்லாம் போகட்டும். பெரியார் அவர்கள் "எனக்குப் பின் இயக்கப் பொறுப்பைஏற்றுநடத்த எனக்கு நம்பிக்கையுள்ள ஒருவரையாவது இயக்கத்தில் காணமுடியவில்லை" என்று சொன்னதற்கு மூக்குமேல் கோபம் பொத்துக்கொண்டுவந்தமாதிரி பேசியும், எழுதியும் வருகிற இவர்கள் செய்தது என்ன? பெரியார் சொன்னதை நிரூபித்த மாதிரிதானே நடந்து கொண்டார்கள்? பெரியாருக்குப் பதில் தலைவர் இயக்கத்தில் இப்போதிருக்கிறவர்களில் ஒருவரும் லாயக்கில்லை என்பதை ஒத்துக்கொண்டுதானே, ஒதுங்கியிருக்கும் பாண்டியன் அவர்களிடம் காவடி எடுத்துச் சென்றனர்.

தோழர் பாண்டியன் அவர்களுக்குத் தெரியாதா? இவர்கள் யார் என்று. தன்னையெல்லாம் வெளியே துரத்தியதற்கு மூலகாரணமாய் விளங்கியவர்களையா அவர் நம்புவார்? எனவே தான், கன்னத்திலறைந்ததுபோல் பதிலளித்திருக்கிறார் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளமாட்டேன்; கட்டாயம் மறுத்துவிடுவேன் என்று. அதே மூச்சில் "என்னையெல்லாம் நம்பாது—நேற்று வந்த உன்னை நம்பிய பெரியாருக்குப் புத்தி புகட்டுங்கள்! நன்றாகப் புத்தி புகட்டுங்கள்!!" என்று வெகு நாசூக்காக—மிக வினையமாக மூக்கைச் சொரிந்துவிட்டிருக்கிறார் பாண்டியன் அவர்கள்.

இவைகளையெல்லாம் இவ்வளவு தூரம்—அதுவும் பெரியார் திருமணம் முடிந்தபின்பு—எழுதுவதற்குக் காரணம், எதிர்ப்புக்கு முக்கியஸ்தர்களாய் விளங்கிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் பெரியார் அவர்களை எதிர்க்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தவர்கள்; அல்லது பெரியாருக்குப் பின் இன்னின்ன விதத்தில் பலன் பெறலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தவர்கள். ஆகவேதான், சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தவர்களும், ஏமாந்து போனவர்களும் ஒன்றுசேர்ந்து கொண்டு இதை ஒரு சந்தர்ப்பமாகக் கருதி "துருப்புச் சீட்டை அடித்துப்பார்த்தனர். அப்படியிருந்தும் "ஜாக்கி" கீழே விழவில்லை என்ற மாதிரியில் திருமண ஏற்பாடு நிறுத்தப்படாமல் நிறைவேறிவிட்டது. அதனால் இன்னும் ஆத்திரம் அதிகப்பட்டு-என்னென்னவெல்லாமோ நாடகம் நடத்துகிறார்கள்; நடத்தித்தான் தீருவார்கள். இது இயற்கை.

ஆனால், மற்றவர்கள் கொள்கைக்காக இயக்கத்தில் பற்றுக்கொண்டுள்ள பொதுமக்கள், சென்ற கதைகளை மறந்துவிட்டு—பழையபடி இயக்கக் காரியங்களில் கவனம் செலுத்தவேண்டுகிறேன்.

பெரியார் அவர்களைச் சிறை அழைக்கிறது. சிறையிலிருந்து வெளிவருவாரா? இந்த நன்றி கெட்ட மக்கள் முகத்தில் மீண்டும் விழிக்க வாய்ப்பில்லாமல் போவாரா? என்று அய்யுறுகிறேன். ஏன்? அந்த அளவுக்கு மனவேதனையை அவரது சிஷ்யர்கள் என்பவர்களாலேயே செய்யப்பட்டாய்விட்டது. அதனால் அவருக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. இப்படித்தான் பல பெரியோர்களின் முடிவு எனச் சரித்திரம் கூறுகிறது.

இடையில் நிறுத்தியிருந்த பத்திரிகையை மீண்டும் துவக்கி, அவரை வைதுகொண்டு வாழ்வதையே பிழைப்பாகக் கொண்டு பத்திரிகை நடத்திப் பிழைக்கிறவர்கள் பிழைக்கட்டும். அவர்களைப் பற்றியும் கவலைப்படாதீர்கள். மற்றவர்களெல்லாம் என்ன செய்யப்போகிறீர்கள்? என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்தியுங்கள்! இதுவே எனது வேண்டுகோள்!

இல்லாத கடவுள், பேய், பூதம், பிசாசு இவைகளை இருப்பதாக மனிதன் தானாகவே கற்பித்துக் கொண்டு—பிறகு அவைகளைக் கண்டு விறுக்கு, விறுக்கென்று

பயந்து சாவதும், அவைகளைப் பற்றி வாதப்பிரதிவாதங்கள் செய்து கொண்டிருப்பதும் எவ்வளவு மெனக்கெட்ட வேலையோ, அது மாதிரியேதான் பெரியார்—மணியம்மை திருமணத்தைப்பற்றி—அதனால் என்னமோ இயக்கத்துக்கே இழுக்கு ஏற்பட்டு விட்டதாகக் கற்பித்துக் கொண்டு—அதைப்பற்றியே சதா பிரமாதப்படுத்திப் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருப்பதும் வீண் வேலை—நமக்குச் சம்மந்தமில்லாத வேலை என்று நான் கருதுகிறேன்.

ஆனால், எப்படியோ இந்த விஷயம் இங்கிலீஷ் எழுத்து வி (V) மாதிரி போகப்போக விரிந்து கொண்டே போகிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்காமல், பொதுமக்களின் கவனத்தை இந்த விஷயத்திலேயே இழுத்துச் செல்வதானது எந்த வகையிலும் நியாயமானதாகத் தெரியவில்லை.

எப்படியோ ஒரு விதத்தில் இந்தக் காரியத்தில் கவனத்தைச் செலுத்தி—ஆத்திரமும், அவசரமும் பட்டு விட்ட தோழர்கள்—இந்த நிலையிலாவது விஷயத்தை மறந்து விட்டு, இயக்க வேலையில் கவனம் செலுத்த முன்வர வேண்டுகிறேன்.

சித்தோடு கழக முடிவு.

சித்தோடு, ஜுலை 20.

"பகுத்தறிவு தந்தை பெரியாரவர்கள், பகுத்தறிவுள்ள மணியம்மையின் உடன்பாடு பெற்று, சட்டத்திற்காக 'திருமணம்' என்கிற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதை, "பொருந்தா மணம்" என்றும் "கொள்கைக்கு முரண்" என்றும் போலிக் கூரல் எழுப்பி, உண்மையிலேயே இயக்க வளர்ச்சிக்கு விரோதமாக சிலர் நடந்து வருவதானது ஒவ்வொருவரும் கவலைப் படவேண்டியதாகும். கழக வளர்ச்சியில் அக்கரையுடைய தோழர்கள் இந்தப் பித்தலாட்ட வேலைக்கு இடங்கொடாமல், வழக்கம்போல் கழக வேலையில் தீவிரமாக இறங்கிச் செயலாற்ற வேண்டுகிறோம்" என்பதாக சித்தோடு கழகத் தோழர்கள் அறிவிக்கிறார்கள்.

பெரியார்மீது 144 மீறிய வழக்கு.

—(●)—

உடுமலைப்பேட்டை ஜுலை 16

உடுமலைப்பேட்டையில் 16-4-49-ம் நாள் விதிக்கப்பட்ட 144 தடையுத்தரவை மீறியது பற்றி, பெரியாரவர்கள் மீதும் ஏனைய மூவர்மீதும் தொடரப்பட்ட வழக்கு சரியாக 3-மாதங்களுக்குப் பின் இன்று காலை 11-30 மணிக்கு உடுமலைப்பேட்டை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட தலைவர் பெரியார் அவர்களும், தோழர்களான மதியழகன், தங்கவேலு, நாரயணசிங் ஆகியோரும் 11 மணிக்கே கோர்ட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

கோர்ட்டின் நாலாபுறங்களிலும், விசாரணையைக் கவனிப்பதற்காக ஆயிரம் பேருக்குக் குறையாதபடி பெருங் கூட்டம் திரண்டிருந்தது.

144- மீறியது குறித்து நால்வரும் குற்றவாளிகள் என மாஜிஸ்திரேட் குற்றப் பத்திரிகையைப் படிக்கவே, நால்வரும் தனித் தனியே 'நான்குற்றவாளி அல்ல' என்று மறுத்தார்கள். பின் நால்வரிடமும் அப்படியே எழுதி கையெழுத்து வாங்கிக் கொண்டு, இன்ஸ்பெக்டர் சென்னை சென்றிருக்கிறார் என்கிற காரணத்தைக் கூறி, வழக்கை இந்த மாதம் 25-ம் தேதிக்கு மாஜிஸ்திரேட் தள்ளி வைத்தார்.

நாகை திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்.

15-7-49ம் தேதி மாலை 6 மணிக்குக் கழக நிர்வாகக் கூட்டம் தோழர் ஆர். வி. கோபால் தலைமையில் கூடியது. அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஆலோசனை செய்து ஏகமனதாக நிறைவேறியது.

1. திராவிடர்களின் தனிப் பெருந்தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மீது பூரண நம்பிக்கை தெரிவித்து என்றும் போல் நிரந்தரத் தலைவராக இருக்க இக்கழகம் தீர்மானிக்கிறது.

2. தம் தனிப்பட்ட சுயநலங் காரணமாய் உதித்த சொந்த குரோதத்தைக் கட்சியில் புகுத்தி இயக்கத்தைக் குலைக்க முயற்சிக்கும் தோழர்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. நாகையிலுள்ள இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு இக்கூட்டம் அனுதாபத்தோடு ஆதரவு அளிப்பதுடன் சாந்தமும் சமாதானமுமான முறையில் தொழிலாளர்கள் நடந்து வருவதைப் பாராட்டுவதோடு இதை நீடிக்க விடாமல் மானேஜ்மெண்டார் சீக்கிரம் தொழிலாளர்களின் ஜீவாதாரமான கோரிக்கைகளைத் தீர்த்து வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

4. மேற்கண்ட 3வது தீர்மானத்தை சம்பந்தப்பட்ட நிர்வாகிகளுக்கு அனுப்பக் கழகச் செயலாளருக்கு இக்கூட்டம் அதிகாரமளிக்கிறது.

புவனகிரி திராவிட கழக நிர்வாகக் கமிட்டி.

14-7-49 காலை 10-மணிக்கு கே. நமசிவாயம் அவர்கள் தலைமையில் புவனகிரி திராவிட கழக நிர்வாகக் கமிட்டி கூட்டம் கூடிற்று. கமிட்டி மெம்பர்கள் 11 பேர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானம் 1:— இவ்வளவு சூழ்ச்சிகளுக்கிடையேயும் தொந்தரவுகளிடையேயும் பெரியார் அவர்கள் வாரசு உரிமைக்காக மணியம்மையாரை பதிவுத் திருமணம் செய்து முடித்ததை இக் கூட்டம் பாராட்டுகிறது.

தீர்மானம் 2:- 11-7-49 அன்று சி.என் அண்ணாதுரை "எனது வேண்டுகோள்" என்ற தலைப்புடன் விடுத்திருக்கும் அறிக்கையை கமிட்டி பரிசீலித்து சி.என்.ஏ. விடுத்திருக்கும் அறிக்கை பொறுப்புள்ளதாகவோ நேர்மையுள்ளதாகவோ கருதப்படாததால் அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது.

(●)

[4ம் பக்கத் தொடர்ச்சி]

மிடைந்தவறியோர்க்கியோமனிதிய
மீட்டியிருந்தோரும்
குடைந்துநீருண்கூவல்குளங்
குட்டஞ்சிதைத்தகொடியோரும்
ஆராயங்களழித்தோருமதிதி
வருந்தவயின்றோருந்
தீராவிடும்பைபகைவருக்குந்தவ
சிலருக்குஞ்செய்தோருஞ்
சோராநிலையைச்சேர்ந்தொழுகித்
தீவேட்டுண்ணுந்திறந்திறம்பிப்
பாராவாரங்கலத்தேறிநிதிவேட்
டுழன்றபார்ப்பாரும்

இன்னுங்கொடும்பாதகம்புரிந்
தோரியாவரேனுமவரெல்லாம்
பின்னும்சடிலமாமுனியேதிரு
நீறணியப்பெறிலிவர்பான்
மன்னும்பிறவிமுதல்வினைமுழுது
மாயும்வயங்கொளியோன்
பின்னுங்கனகவுதயவரை
மேவவிருள்வீந்திடுவதுபோல்.

இப்பாட்டுகளின் கருத்துக்கள்:- கொலை செய்தல், திருடுதல், மது பானம் செய்தல், குரு துரோகம் செய்தல், கொடுங்கோன்மை ஆக்ஷி செய்தல், மாதா பிதாக்களை கொல்லல், செய்நன்றி மறத்தல், வீடுகளுக்கு தீயிடுதல், பசு ஹத்தி செய்தல், பசு மாமிசம் சாப்பிடுதல், கணவனுக்கு துரோகம் செய்தல், பிற புருஷரைச் சேருதல், பொய் சாக்ஷி சொல்லுதல், சாஸ்திரங்களைப்பழித்தல், விரதங்களை இழித்தல், கருவழித்தல், கீழ்மக்களைச் சேருதல், விஷங்கொடுத்துக் கொல்லுதல், தர்மம் செய்யாதிருத்தல், பெண்களை பயப்படுத்தல், படையில் முதுகுகாட்டி ஓடுதல், கோள் சொல்லுதல், தப்பான வழியில் பொருள் சேர்த்தல், கிணறு, குளம், குட்டை ஆகியவைகளை கெடுத்தல் பூஞ்சோலையை அழித்தல், தபசிகளுக்கு உதவாமை, முனிவர்களுக்கு கெடுதி செய்தல், பிராமணன் கப்பலேறுதல், பிராமணன் தன் தருமத்தைச் செய்யாதிருத்தல்,

ஆகிய இந்தப் பாதகங்களும் இன்னும் மற்றும் இதில் சொல்லப்படாத பாவங்களும் செய்திருந்தாலும், அவர்கள் எல்லோரும் நெற்றியில் விபூதியை அணியப்பெறுவார்களே யானால் அவர்களிடம் உள்ள பாவங்கள் எல்லாம் சூரியனைக்கண்ட இருட்டு போல் தானாகவே ஒழிந்துபோகும் என்பதாகும்.

மேலும்

மேலும் விபூதியின் மகிமை இவ்வளவோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. இன்னும் மேலே போகிறது, அதாவது

41-வது பாட்டு.

எள்ளப்படுகீழ்மக்களெனு
மிழிந்தகுலத்தோரென்றாலும்
வள்ளற்பரமன்றிருநீறுமணியு
மணிந்தமாண்பினரை
யுள்ளத்துள்ளேயிருபொழுது
முணர்ந்துதெருண்டுசிவனெனவே
கொள்ளத்தகையவறிவினரே
பிறவிக்கடலிற்குளியாதார்.

இதன் கருத்தாவது:- பிறவியில் கீழ்மக்களாக இருந்தாலும் விபூதி அணிவார்களேயானால் அவர்கள், ஒவ்வொருவருடைய இருதயத்திலும் வைத்து பூஜிக்கப்படத் தக்கவர்களாவார்கள் என்பதாகும்.

இன்னும் மேலே!

விபூதியின் பெருமை இவ்வளவோடு நிற்கவில்லை. இன்னும் ஒரு அந்தஸ்து மேலே போகின்றது. அது என்னவென்றால்,

42-வது பாட்டு

நாடிமூன்றுகாலமெண்ணானம்பன்
றிருப்பேரிசைகவிலா
னாடிவிளங்கும்பாவையெனவறி
வொன்றில்லானனனாலு
நேடிவெண்ணீறினிதள்ளிநெற்றி
விளங்கத்தரிப்பானேற்
கோடிபிதிர்கள்கும்பியிடைகுளியா
தரன்பாற்கூட்டுவனால்.

இதன்கருத்து:-சிவபெருமானை மனதினால்நினைக்காதவனாகவும், வாயினால் உச்சரிக்காதவனாகவும் இருப்பவனும், சிறிதும் அறிவில்லாத மரக்கட்டை போன்றவனாய் இருப்பவனும் விபூதியைநெற்றியில் அணிவானேயானால் அவன் மேதாவியாவதோடு அவனுடைய பிதிர்க்கள் எப்படிப்பட்ட நரகத்தில் இருந்தாலும் எத்தனை பேரானாலும் அதிலிருந்து மீண்டும் சிவபெருமான் பாதத்தை அடைவார்கள் என்பதாகும்.

இன்னும் இன்னும் மேலே!

விபூதியின் மகிமை இவ்வளவோடுகூட நின்றுவிடவில்லை. இன்னும் இன்னும் ஒரு அந்தஸ்துக்கு மேலே போகின்றது. அது என்னவென்றால்,

43-வது பாட்டு.

ஏழுகோடிமந்திரமுமெண்ணி
றவமுமிருநிலத்தி
லாழுமுடையகங்கைமுதலனந்த
நதியுமமரேசன்
வீழுந்துரகமீறாமவ்வேள்வி
யனைத்தும்விளம்புங்காற்
றாழுஞ்சடையான்றிருநீறுதரும்
பேறொன்றுந்தாராவே.

இதன் கருத்தாவது:- எப்படிப்பட்ட மந்திரங்களுக்கும் எப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலங்களுக்கும் கங்கை முதலிய எப்படிப்பட்ட நதிகளுக்கும், எப்படிப்பட்ட யாகங்களுக்கும், விபூதி பூசுவதால் பரமசிவன் அருளும்பேற்றில் ஒன்றுகூட அடையமுடியாது என்பதாகும்.

இது யார் சொன்னது? தெருவில் போகிறவர்கள் சொன்னதல்ல. மற்று யார் என்றால்,

45-வது பாட்டு.

இந்தவிபூதிமான்மியத்தைவேதம்
பலவுமியம்புமதைச்
சிந்தைக்கெளிதாய்மிகச்சுருக்கிச்
செப்பினோமென்றருள்புரியா
வந்தத்துடனேமுதலுமில்லாவாதி
பரமனகன்றிடனுஞ்
சந்தக்குலநான்மறைவிரிஞ்சனுல
கத்தடைந்தான்சனற்குமரன்.

இதன் கருத்தாவது:—"இந்தப்படியான விபூதியின் மகத்துவம் வேதங்களில் சொல்லப்பட்டதாகும். என்றாலும் எளியவர்க்கும் விளங்கும்படியாக நாம் சொல்லுகிறோம்" என்று கைலாசபதியாகிய சிவபெருமான் சொன்னார் என்பதாகும்.

ஒரு சிடிகை.

ஆகவே ஒரு சிடிகை விபூதி எடுதது நெற்றியில் குறுக்குவசமாகப் பூசிக்கொண்டவுடன் எவ்வளவு கீழ்மக்களானாலும் எவ்வளவுமடையனானாலும், எவ்வளவு அயோக்கியனானாலும், எப்படிப்பட்ட பாவங்களைஎல்லாம் செய்தவனானாலும் சகல இழிவும், சகல குறைவும், சகல பாவங்களும் நீங்கி அவர்கள் மாத்திரமல்ல மல் அவர்கள் பிதிர்க்களும், ஏற்கனவே நரகத்தில் விழுந்து அழுந்திக் கொண்டிருக்கிறவர்களும் எலலோரும் மோட்ச லோகத்தை அடைந்துவிடுவார்கள் என்று வேதமும் சிவபெருமானும் சொன்னார்கள் என்றால்,

இனி இதற்கு அப்பீல் ஏது?
இனி மக்களுக்குப் பாவங்கள்

ரோஜா முத்தையா

ஏது?

இனி எப்படிப்பட்ட பாவத்தை யாராலும் செய்வதற்கு பயம் ஏது? தடை ஏது?

ஆகவே விபூதி பூசுவதென்பது பாவம் செய்வது, பாதகம் செய்வது மற்றும் உலகிலுள்ள கெட்ட காரியங்கள், இழி காரியம் எல்லாம் செய்வது என்பதற்கு 'லைசேன்சா' இல்லையா என்று கேட்கிறோம். விபூதி பூசிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து நாம் சில சமயங்களில் பரிகாசம் செய்ததோடு அவர்களை மடையர்கள் என்றும் எண்ணினது உண்டு.

இப்போது அது சரியல்லவென்றே தோன்றுகின்றது. விபூதி பூசுகிறவர்கள் எல்லாம் மகா கெட்டிக்காரர்கள், தந்திரசாலிகள் என்றுதான் செ.ல்ல:வண்டி'பிருக்கிறது.

ஏனெனில்பெரிய பெரியபாதகங்களையும், பாவ காரியங்களையும் தாராளமாகச் செய்துவிட்டு அதற்காகக் குறிக்கப்பட்ட பெரிய பெரிய தண்டனைகளில் இருந்து தப்பித்துக்கொள்ள சுலபமாக வழி கண்டுபிடித்த மகாபுத்திசாலிகள் என்று எண்ணவேண்டியதாயிற்று.

அவ்வளவோடு மாத்திரமல்லாமல் விபூதி அணிவது என்பது பஞ்சமா பாதகமுதல் பல பாதக காரியங்கள் செய்தவர்களைக் கண்டுபிடிக்கும் தர்மாமீட்டர் என்னும் அளவு கருவியாகவும் விளங்கிற்று.

ஆகவே உலகில் எவரும் பாவத்துக்கு அஞ்ச வேண்டியதில்லை என்பதோடு ஒரு சிட்கி சாம்பலால் எல்லாப் பாவமும் மன்னிக்கப்பட்டுப் போகும் என்பதும் வேத வாக்கு! சிவபெருமான் வாக்கு!!

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தேனும் உண்டா?

ஆகையால் பெண்கள் மண முறையில் இனி சற்று கவனத்தோடு நடந்துகொள்ளல்வேண்டும். பிறரின் வாய்க்குப் பயந்து உங்கள் வாழ்வைப் பாழாக்காதீர்கள்.

பெண்ணின் கழுத்திலோ பெரிய மஞ்சள் கயிறு—இது அவளை மணமானவள் என்று அறிவிக்க—பறைசாற்ற. இந்துமதப்படி இக்கயிற்றுக்கு அபார மதிப்பு!

ஆடவன் மணமானவன் என்பதை அறிவிக்க, மனைவியால் கொடுக்கப்பட்ட — கட்டப்பட்ட அடையாளச் சின்னம் ஏதாவது அவனிடம் உள்ளதா? அடையாளச் சின்னம் இருந்தால்தானே அவனை மணமானவன் என்று கண்டுகொள்ள முடியும். இதைக் கேட்டால் ஆத்திரம் கொள்வோர் உண்டு. இதுவே சூழ்ச்சி!

பெண்களின் பிற்கால வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கப்படுதலுக்கு இக்கயிற்றையே துணை கொண்டனர்.

சமுதாயத்தில் ஒத்த உரிமையுடன் வாழப் பதிவுத் திருமண முறையே நல்முறையாகும்.

மணமான பெண், கணவனின் கைப்பாவை மட்டுமல்ல, அவனுடைய சுற்றத்தாருக்கும் அடிமையாகி வாழல் வேண்டும்.

கணவன் காமுகன், குடியன், மூர்க்கன் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இதுபற்றிக் கேட்கவோ, திருத்தவோ மனைவிக்கு உரிமை கிடையாது.

மனைவி மீது குற்றமோ தவறோ இல்லாதிருக்கலாம். காரணமின்றிக் கணவனுடைய துன்புறுத்தலுக்காளாகி, 'சிங்கக் கூட்டில் சிக்கிய சிறு முயல் தன் வாழ்வைத் துறப்பது போல்' வாயில்லாப் பூச்சியாக வதைந்து மடிகின்றனர்.

பெண்களின் இள உள்ளங்களிலே மலரும் காதல் மலர் ஆடவரின் வெந்தணலால் கருகி விடுகிறது. பின் வாழ்க்கை அவர்களுக்கு வறண்ட பாலைவனமாகக் காட்சி அளிப்பதில் வியப்பில்லை. வாழ்க்கையின் முற்பகுதியில் ஏற்படும் பெருத்த ஏமாற்றம் பெண்களைப் பற்றற்றவர்களாக-நடைப்பிணங்களாக ஆக்கி விடுகின்றன.

இவ்விரும்பப்படாத வாழ்விலிருந்து—மண பந்தத்திலிருந்து—கொடுமையிலிருந்து இறந்தால் ஒழிய மீள வேறுவகை இல்லை பெண்களுக்கு. குஷ்டரோகியானாலும், குரூபியானாலும் பெண் தன் வாழ்நாள் பூராவும் கட்டிய அவனுடன் காலத்தைக் கடத்தியே தீரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறது.

கணவன் காரணமின்றி கட்டிய மனைவியைத் தள்ளிவைக்க இடம் கொடுக்கும் அதே மதம், பால்ய விதவைகளுக்கு பாரபட்சமான முடிவையே தருகிறது.

பெண் சிறுமியாக இருக்கலாம். இறக்கும் கிழவனை மணந்தது அவள் குற்றமல்ல. சூழ்நிலை அவளை வயோதிகனின் மனைவியாக்கியது. வாழ்க்கையின் இறுதிப் படியிலிருந்து கிழவன் இறந்துபோகிறான். கிழவன் இறந்ததற்காக விதவைக் கொடுமை அவன் மனைவிக்கு அளிக்கப்படுகிறது.

இதே முறையில் மனைவியை இழந்த ஒரு ஆண்மகனுக்காவது 'மனைவியை இழந்தவன்' என்பதற்காக ஏதாவது சிறு கொடுமை—சோதனை தரப்படுகிறதா? அப்படியிருக்கப் பெண்களுக்கு மட்டும் ஏன் இந்தக் கொடுமை என்று கேட்பது குற்றமாகுமா?

பெண்ணுக்கோ கணவனால் கட்டப்பட்ட தாலிக் கயிறு கழற்றப்படுகிறது; அணிகள் அகற்றப்படுகின்றன; அழகு சிதைக்கப்படுகிறது. இச் சித்திரவதைக்குப் பெண் உட்பட்டேயாகவேண்டும். வலியப் புகுத்தப்படுகிறது இக்கொடுமையை வாயில்லாப் பூச்சியாகிய அவள்மீது.

இதற்காகத்தான் தாலி கட்டும் மண முறையை முதலாவதாக நீக்கப்படல் மிக மிக அவசியம்.

மனைவியை இழந்தவன் கிடுகிடு கிழவனானாலும் எட்டாம் நாளே மணப் பேச்சு—புது மாப்பிள்ளை!

இதேபோல் குழந்தையில்லா ஆடவன் வேறு மணம் செய்துகொள்ளலாம். குழந்தையற்ற பெண் மற்றோனை மணப்பதென்றால் வாயைப் பிளப்பர், வார்த்தைகள் வெளிவராது.

சூழ்நிலையின் கொடுமையாலும் ஆடவரின் மயக்கு வார்த்தைகளாலும் சில பெண்கள் அழிக்கப்படுகின்றனர். அவளுக்குப் பெயர் விபசாரி—தாசி. அவள் வயிற்றில் பிறந்த குழந்தைக்கோ சமுதாயத்தில் இழிநிலை.

இக் குற்றத்திற்குக் காரணவானான—உடந்தையான அவனுக்கு விபசாரகன், காமுகன் என்ற நிரந்தர இழிபெயர் ஏதாவது உள்ளதா?

ஆடவன் செய்யும் குற்றத்திற்கு சாதகம் அளிக்கும் அதே சமுதாயம், அதே குற்றத்தைப் பெண் செய்தால் பாதகி என்று தூற்றுவதேன்?

கொடுமைக்குக் காரணவான் ஆண். தூற்றப்படுவது—இகழப்படுவது பெண்ணே!

குற்றம் செய்தவன் ஆண், தண்

நூலக அறக்கட்டளை

டனை பெறுபவள் பெண். ஏன் இந்தக் கொடுமை?

சமூகத்தின் பாதிப்பேர்களான பெண்கள் விழிப்புணர்ச்சியுடன் சமுதாயத்தில் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நீக்க ஒன்றுபடுவது முக்கியமாகும்.

சட்டசபையிலுள்ள பெண் உறுப்பினர்கள் மாதர்களின் முக்கிய உரிமைகளான மேற்கூறியவைகளைச் செய்து பெருமையடைய வேண்டும்.

விபசாரி—விதவை என்னும் கொடுமை இனி இந்நாட்டிலே தலைகாட்டாத — காட்ட முடியாத தக்க பாதுகாப்புகளை அவர்கள் செய்யவேண்டுடும்.

மதத்தின் பெயரால் நம்மில் ஒரு பகுதியினராகிய பெண்களை கோவிலுக்கு பொட்டுக்கட்டி தேவடியாள்—தேவதாசி என்று கூறுமளவுக்கு அறியாமையை விலை கொடுத்து வாங்கிவிட்டோம்.

முட்கள் நிறைந்த செடியில் மணமிகு ரோஜா மலர்ந்ததுபோல்தான், இந்து மதத்தில் பெண்களாகப் பிறந்தவர்கள் நிலையும்.

சிந்தனைப் பொறிகளிலே சிக்கிய நம் உள்ளம் சீற்றம்கொண்டு விடுதலைப் பறவைகளாக வாழ இந்துமதத்தில் நிகழும் பழக்க வழக்கங்களையும்—தொல்லைகளையும் முதலாவதாக ஒழித்தாக வேண்டும்.

பெண்ணடிமைக்கு உரமாக—பெண்களின் உள்ளத்தில் விடுதலை வேட்கை எழாத அளவுக்கு அழுத்தும் புராணத்தையும் — ஆபாசக் கதைகளையும் இனியாகிலும் தீண்டாதீர். கரையான் தீண்டட்டும்! இன்றேல் புராணப் புரட்டு மண்ணோடு மண்ணாக மடியட்டும்.

பெண்களை நிரந்தர அடிமைகளாக்கவே மதம் துணைபுரிகிறது.

பெண், ஆண் இரு பாலருக்கும் ஒத்த உரிமை வழங்கப்பட்டாலொழிய, இந்நாட்டுப் பெருமையும்—சுதந்திர மணமும் வெளிநாடுகளில் வீசமுடியாது.

பழமையின் நினைவை மறக்க முடியாமல்—மாற்ற முடியாமல் மேலும், மேலும் பெண்களுக்குத் தொல்லை தரப்படுமேயானால் சட்டத்தின்மூலம் அவர்களுக்கு நல் நீதி புகட்டல் அரசியலாரின் வேலையாகும். சுதந்திர நாட்டில் பெண்களின் துன்பம் துடைக்கப்படல் மிகமிக அவசியம்.

வாழ்க திராவிடம்—

ஒழிக பெண்ணடிமை!

(2ம் பக்கத்தொடர்ச்சி)

வும் இயலாது கூலிகளை நியமிக்க வேண்டியவாறு அவர் அவ்வளவு சக்தியற்றவரா?

கடவுளைக் காப்பாற்ற ஆத்திரம் கொள்ளும் ஆஸ்தீக நண்பனே! நாஸ்தீகரிடத்திலும் அவிசுவாசிகளிடத்திலும் நீ கொண்டுள்ள வெறுப்பு எவ்வளவு கொடுமையானதென்று நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?

உலக நாகரிகத்தின் உண்மை சரித்திரந்தான் யாது? அவிசுவாசிகளுடையவும் நாஸ்தீகர்களுடையவும் வெற்றியே உலகத்தின் உண்மைச் சரித்திரமாகும். அவர்கள் பொய் நம்பிக்கைகளை மறுத்ததினாலேயே உண்மை வெளியாகி உலகம் நாகரீகம் பெற்றுவருகிறது.

அக்காலத்தில் வாழ்ந்த ஆஸ்தீகக் கொள்கையுடைய "புண்ணிய சீலர்கள் உண்மையை வெளியாக்கப் பாடுபட்ட அவிசுவாசிகளையும் நாஸ்தீகர்களையும் நிந்தனை செய்தார்கள், சித்திரவதை செய்தார்கள், ஹிம்சித்தார்கள், கன்னெஞ்சத்தோடு கழுவேற்றினார்கள், கொலை புரிந்தார்கள். "அந்த ஆஸ்தீகர்களின் சந்ததிகளோ கர்ண பரம்பரைச் செய்திகளையெல்லாம் உண்மையென நம்பினார்கள். ஆனாலும் அவைகளைத் தைரியமாய் மறுத்துக் கூறி இறந்துவிட்ட "அவிசுவாசிகளை" யெல்லாம் இப்போதும் வாழ்த்துகிறார்கள். ஆனால் இப்போது உண்மையை விளக்குவதற்குப் பாடுபட்டுக்கொண்டு உயிருடனிருக்கும் "அவிசுவாசிகளை" யெல்லாம் குற்றம் சொல்ல முயற்சிக்கிறார்கள்.

சூரிய மண்டல உண்மைகளை முதன்முதல் வெளியிட்ட கோபர்நிகஸ் சமுதாயப் பிரஷ்டரானார். இப்பொழுதோ பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்று எல்லா மக்களும் நம்புகிறார்கள். முன் நிந்திக்கப்பட்ட கோபர்நிகஸ் பெயரும் இப்போது போற்றப்படுகிறது.

ஒவ்வொரு நட்சத்திரமும் உண்மையில் ஒவ்வொரு சூரியனுக்கு ஒப்பானது என்று முதன்முதல் கூறிய புரூனோ தீக்கிரையாக்கப்பட்டார்.

வானசாஸ்திர உண்மைகளை வெளியிட்டு, பாதிரிகளின் குருட்டு நம்பிக்கைகளையொழித்த காலிலியோ சிறையில் சித்திரவதை செய்யப்பட்டார்.

இப்பொழுது அதே கிறிஸ்தவர்கள் காலிலியோ கூறியவைகள் எல்லாம் உண்மையென்று ஒப்புக்கொள்கிறார்கள். அவரது பெயரும் இப்போது உலகத்தில் மதிப்புப் பெற்றிருக்கிறது.

இவ்வண்ணம் ஆராயப் புகுந்தால் அவிசுவாசிகள்—நாஸ்தீகர்கள் என்பவர்கள் கூறியவைகளே உண்மையென்றும், விசுவாசிகள்—ஆஸ்தீகர்கள் என்பவர்கள் கூறியவைகள் பொய்யென்றும் விளக்கப் பதினாயிரக்கணக்கான திருஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டலாம்.

இப்போது நாளுக்கு நாள் கொஞ்சங் கொஞ்சமாக வைதீகர்கள் பின்னோக்கிச்சென்று கொண்டே இருக்கின்றனர். காலஞ் செல்லச் செல்ல சாஸ்திர உண்மைகளை (சைன்ஸ்) ஆத்தீகர்களும் வைதீகர்களும் ஒப்புக்கொண்டுதான் வருகிறார்கள்.

எனினும் "உண்மை நம்பிக்கையுடையவர்கள்" அல்லது ஆத்திகர்கள் நாத்திகர்களை வெறுக்கிறார்கள்; நாத்திகர்களைத் தூற்றாமலிருப்பதில்லை; தூற்றுவதைத்தம் முக்கிய கடமையென்றும் நம்புகிறார்கள்.

டார்வின் சாஸ்திரியார் கொள்கைகளை நாத்திகக் கொள்கை, மூடக் கொள்கை என்று வெறுத்தவர்கள் இப்பொழுது அந்தப் பரிணாமவாதத்தை சந்தோஷமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உண்மை ஆராய்ச்சியாளரை 200 வருஷகாலமாகச் சித்திரவதை செய்தும், கொலை புரிந்தும், வந்த ஆத்திகன் இன்னும் திருப்தியடையவில்லை.

மதப் புரட்டுகளையும், வேதப் புரட்டுகளையும், புராணப் புரட்டுகளையும், ஒழிக்க முன்வருகின்றவர்களை நாத்திகர்கள் என்று ஆத்திகன் இப்பொழுதும் கூறிக்கொண்டுதானிருக்கிறான்.

உதாரணமாக, கிறிஸ்தவர் அல்லாத பெண்களும் புருஷர்களும் எரிநரகத்திலாழ்ந்து தவிப்பார்கள் என்று கிறிஸ்தவர்கள் கூறுவது வழக்கமாக இருந்தது. அது மூட நம்பிக்கையென்று எடுத்துக்காட்டினால் அவர்களுக்குப் பிடிக்க

வில்லை.

ஞான ஸ்நானம் பெறாத குழந்தைகள் எல்லாம் நரகம் புகுவார்கள் என்று கிறிஸ்தவர்கள் நம்பியிருந்தார்கள். அது மூடநம்பிக்கை என்று கூறினால் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

மந்திர வாதத்திலும் சூனியத்திலும் அவர்களுக்கு நம்பிக்கையிருந்தது. ஆயிரக்கணக்கான மந்திரவாதிகளையும் சூனியக்காரர்களையும் அவர்கள் நெருப்பிலிட்டுக்கொளுத்தினார்கள்.

இப்பொழுது மந்திரவாதத்தைப்பற்றிப் பேசினால் அதே கிறிஸ்தவர்களுக்கு வெறுப்புண்டாகிறது. மந்திரவாதிகளை அஞ்ஞானிகள் என்கின்றார்கள்.

ஆதாம், ஏவாள், பிரளயம் முதலிய புராணக்கதைகளை அவர்கள் நம்பினார்கள். இப்பொழுதோ அவைகள் எல்லாம் உபமான கட்டுக்கதை என்று கூற முன்வந்துவிட்டார்கள்.

ஆறு நாட்களில் உலகம் உண்டு பண்ணப்பட்டதென்று அவர்கள் நம்பினார்கள். இப்பொழுது பூகர்ப்ப சாத்திரக் கொள்கைகளை மெல்லமெல்ல ஒப்புக்கொள்கிறார்கள்.

ஓ ஆஸ்தீக நண்பர்களே!

நாத்தீகம் என்னப்பட்டவைகளே இப்பொழுது வைதீகமாக இருக்கின்றன என்று நீங்கள் உணரவில்லையா? நாஸ்தீகன் என ஹிம்சிக்கப்பட்டவர்கள் கூறியவைகள் எல்லாம் இப்பொழுது உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டுவிடவில்லையா? இன்று அவைகளைப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடமாகப் பாதிரியார்களாலேயே கற்பிக்கப்படவில்லையா?

தற்காலம் உண்மையென நம்பப்படுபவைகளை முன்னூறு வருடங்களுக்கு முன் யார் கூறியிருந்தாலும் அவர்கள் அப்பொழுது கொல்லப்பட்டே யிருப்பார்கள் அல்லவா? எனினும் ஒரு நூற்றாண்டுக்குப்பின் உண்மையென ஒப்புக்கொள்ளப்படுபவைகளை முன்னாடியே கூறுவோரை நீ நாஸ்தீகன் என்று அழைக்கிறாய்.

சரித்திரத்திலிருந்தும் விஞ்ஞான சாஸ்திரத்திலிருந்தும் நீ ஒரு படிப்பினையும் கற்றுக்கொண்டாயில்லை.

நேற்று நம்பத்தகாததாயிருந்தது இன்று நம்பத்தக்கதாய் விட்டதை நீ உணர்கிறாயில்லை.

இன்று நம்பத்தகாததாயிருப்பது நாளை நம்பத்தக்கதாவதும் நிச்சயம்.

சுதந்தரமாகச் சிந்தனைசெய்து சுதந்தரமாகப் பேசிய அவிசுவாசிகளாலேயே உலக நாகரிகம் உருப்பெற்றிருக்கிறது. உருப்பெற்றும் வருகிறது.

அவர்கள் உயிருடனிருந்த பொழுது அவிசுவாசிகள் என்றும் நாஸ்தீகர் என்றும் வெறுக்கப்பட்டார்கள். ஆனால், இப்பொழுதோ அவர்கள் எல்லாம் உலக நன்மைக்காக உழைத்த புண்ணியாத்மாக்களாக மதிக்கப்படுகிறார்கள். இன்றைய நாஸ்தீகர்களும் பெரிதும் அப்படித்தானாவார்கள்.

ஆஸ்தீக நண்பர்களே! நம்மவர்களில் எத்தனையோ உத்தமர்கள் இந்தப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே நீர் கூறும் பழிப்புரையைப் புன்னகையுடன் ஏற்றுக்கொள்கிறோம். “கடவுளைக் காப்பாற்ற”ப் போராடும் சிறு வீரரே! நாங்கள் உம்மிடம் கோபம் கொள்ளவில்லை; உம்முடைய அறிவீனத்தையும் ஆத்திரத்தையும் கண்டு இரங்குகிறோம்.

மிருதங்கக் கலைச்செல்வி தாய்நாடு பிரயாணம்

பினாங்கு புகைவண்டி நிலையத்தில் பல்லாண்டு காலமாக முடிதிருத்தும் தொழிலகம் வைத்து நடத்தி வரும்பொழுது நல ஊழியரும், (உலக மிருக மகாயுத்தம்) (மகாத்மாவின் மரணச் சித்ரம்) போன்ற நகைச்சுவைகொண்டசிறு புத்தகங்களின் ஆசிரியருமாகிய திரு கே. ஏ. பண்டிதரும் அவரது குடும்பமும் 15-6-49ல் தாய்நாடு செல்கின்றனர்.

மலாயாவில் நேதாஜி அரசாங்க அமைப்பு காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட பாலிகா சேனையில் முதல் முதலில் சேர்ந்து தொண்டாற்றிய பினாங்கு, தைப்பிங், ஈப்போ, கோலாலம்பூர் இவைகளில் பொது மேடையேறி பெண்கள் சமூக முன்னேற்றத்திற்கு தீவிர பிரசாரம் செய்து வந்தவரும், பல ஆண்டுகளாக பினாங்கில் மிருதங்கம் பயின்று மலாயாவின் பல சங்கீத வித்துவான்களின் முன்னிலையில் அரங்கேற்றிஆசி பெற்றவரும் ’பினாங்கு இந்தியர் மாதர் சேவா சங்க இன்னிசைக் குழு’வின் சார்பில் அடிக்கடி பினாங்கு ரேடியோ நிலையத்திலிருந்து இன்னிசை ஒலி பரப்பிவருபவருமாகிய செல்வி கே. ஏ. சமதர்மமும் தமது மிருதங்க வித்தவத் தன்மையை இன்னும் மிகுதிப்படுத்துவான் வேண்டியும் தாயகத்திலுள்ள தமிழ் வித்துவான்களின் நல்லாசி பெற்றுத் திரும்பவும் பெற்றோர்களுடன் கூடவே பிரயாணமாகிச் செல்கிறார் என பினாங்கிலிருந்து திரு து.உ. வெங்கடாசலம் என்ற அன்பர் அறிவிக்கிறார்.

வெளிவந்து விட்டது!

வெளிவந்து விட்டது!!

பலர் நெடுநாளாய் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருக்கும் இராமாயண ஆராய்ச்சி

பாலகாண்டம்

132 பக்கம் ● எட்டு அணா.

பிரகிருதிவாதம்

அல்லது

மெட்டிரீயலிஸம்

76 பக்கம் ● அய்ந்தணா.

ஞான சூரியன்

192 பக்கம் ● எட்டு அணா.

தேவைக்கு உடனே எழுதுங்கள்

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

—: கிடைக்குமிடம் :—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர்

என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம்

59. கச்சேரி வீதி, ஈரோடு.